திராவிடநாடு

27-12-59 | வார வெளியீடு | விலை 16 காசு

ஆளுவோரே....!

—[எழிலோவியம்]—

மன்றத்தில் குந்திநீர் ஆளுகின்றீர் — இங்கே
மக்கள் உணவின்றி மாளுகின்றார்!

என்னத்திற் காகநீர் அமைச்சரானீர்? — மக்கள்
இதயக்கண் ணைவாட்டும் புகைச்சலானீர்!

உணவுக்கும் குடிசைக்கும் பஞ்சமிங்கே—இதை
உணராத உங்களின் நெஞ்சமெங்கே?
வீணுக்கா ஓட்டுகள் தட்டிச்சென்றீர்?—நேர்மைப்
பண்பைத்துரோ கத்தீயில் கொட்டிக்கொன்றீர்!

அரிசி புளிவிலை ஏறலாமோ?—ஏழை
அடிவயிற் றில்தீயும் சேரலாமோ?
பெரிய பாரதத்தை ஆளுவோரே — இந்தப்
பிஞ்சுப் பிரச்சினையைக் கிள்ளுவீரோ?

மற்ற தேசநாட்டைப் பாருமையா—அங்கே
மக்கட்கே அரசாங்கம் நடக்குதையா!
நெற்றிக்குப் பொட்டு தழும்பாகுமா?—உங்கள்
நெஞ்சத்துச் சுயநலம் புகழ்சேர்க்குமா?

என்றென்றும் பொதுநலம் புரிந்திடுவீர்—மக்களை
ஏமாற்றும் கருத்தின்றித் திருந்திடுவீர்!
துன்பத்தை மேன்மேலும் வளர்த்திடாதீர்—கேட்டால்
துப்பாக்கிப் பிரயோகம் செய்திடாதீர்!

மக்களை மக்களாய் வாழவைப்பீர்—விலை
மாற்றத்தைச் சீக்கிரம் தாழவைப்பீர்!
அக்கரை யோடாட்சி செய்குவீரே—அன்றி
ஆளத் தெரிந்தவர்க் கிடமளிப்பீரே!

கவிஞர் 'பீத்தோவன்'

இசையின் இனிமையில் மயங்காத மனிதரில்லை, என்பது உலகம் கண்ட உண்மையாகும்! சீறிவரும் கருநாகமும் இசையின் இன்பத்தில் சிந்தை மயங்கி, தன்னை மறந்து களிநடம் புரியும் காட்சியினை நாம் இன்றும் காண்கின்றோம்! அத்தகு பேராற்றல் பெற்ற இசையை, முறைப்படியும் மக்கள் மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும் தன்மையிலும் வடிந்துத்தரும் பேராற்றல் பெற்றவர்களை இசைச் சக்கரவர்த்திகள் என உலகம் கொண்டாடுகிறது!

18-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளையெல்லாம் தன் இசை வெள்ளத்தாலும், கவிதை எழுதும் திறத்தாலும் ஆட்டிப் படைத்த பெருமேதை "லட்விக் வான்.பீத்தோவன்" என்பவராவர்! 1770-ம் ஆண்டு, எழில் குலுங்கும் "ரைன்" நதிக்கரையில் அழகுமிக்க நகரமான "போன்' என்ற இடத்தில். அவர் பிறந்தார்! அவர் தந்தை ஒரு மூன்றாம்தரப் பாடகர் மட்டுமல்ல, என்னேரமும் மதுவின் மயக்கத்தில் காலம் கழிப்பவர்! தாய் அரண்மனையில் ஓர் உயர்ந்த சமையல்காரி!! இத்தகைய குடும்பத்தில் பிறந்த அந்தக் கவிஞனின் இளமைப்பருவம் வேதனைநிறைந்ததாக அமைந்தது இயற்கையே! அழகில்லாத முகமும், பரட்டைத் தலையும், வெளியே வந்து விழுந்துவிடுவதுபோல் பிதுங்கிய கண்களும் அந்த இளைஞனை ஓர் கொடியவன்போல் தோற்றமளிக்கச் செய்தன!

தனது 13-வது வயதிலேயே முறையான இசைக் கலையில் தேற வேண்டுமென்று எண்ணி, அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டான், பெரும்பாலும் 'பியானோ' மூலமே அவன் தனது திறமையை வெளிப்படுத்தினான். கவிதைகள் புனைவதிலும், இசைத்துறையில் புதிய அனுபவங்கள் பெறுவதிலும் அவன் அதிக ஊக்கத்தைச் செலுத்தினான்! 1784-ம் ஆண்டு, அந்தக் காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கிய இசைக் கலைஞனாகிய "மொசார்ட்" என்பவரின் அன்புக்குப் பாத்திரமானான் பீத்தோவன்! அது இசைத்துறையில் நல்ல பயனைத் தந்தது அவனுக்கு! சரித்திரப் புகழ்பெற்ற பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் அவன் இசைத் துறையில் மேலும் பயிற்சி பெறுவதற்காக, "வியன்னா" நகருக்குச் சென்றான்! அவன் சென்ற சிறிது

கி. சோழன்

காலத்தில் அவன் தந்தை காலமானார்! அதற்குப்பின் ஊர்திரும்ப வேண்டும் என்ற எண்ணமே அவருக்குப் பிறக்கவில்லை! அங்கேயே நிரந்தரமாகத் தங்குவது என்று முடிவு செய்துகொண்டான்! அந்த நாட்களிலும், அதற்குப்பின்னும் வியன்னா நகரம் இசைப்பிரியர்களின் மாநாட்டு மேடைபோல் இருந்தது என்று கூறலாம்! திறன்மிகு பாடகர்களும், ஏனைய இசைத்துறை நிபுணர்களும்; வியன்னா மக்களை இசை வெள்ளத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்தனர்! ஆனால் பீத்தோவனுடைய இசைத்திறன் ஏனையோரிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவே அமைந்திருந்தது! நாட்டுக்கும், மக்களுக்கும், அது என்றும் நிலைத்து நின்று பயன் தந்தது! அதன் பயன் உலக அரங்கில் அவனுடைய பெயரும் புகழும் பரவுவதற்குக் காரணமாய் அமைந்தது! 1800-ம் ஆண்டில் பீத்தோவன் உலகில் சிறந்த பாடகனும், பியானோ வல்லுநரும், ஏன் பாடலாசிரியரும் ஆனார்!

இப்படி எல்லாத் துறைகளிலும் புகழ் பெற்று விளங்கிய அவரது வாழ்க்கையின் பிற்பகுதி பெரும் சோகப் பெருவெள்ளமாகவே அமைந்துவிடுகிறது! ஆம்! அவரது கேள்வி ஞானம் அழிந்து போயிற்று! காதுகள் இரண்டும் செயலற்றன! ஒரு இசை நிபுணனுக்குத் தனது காதுகளை விடப் பெருஞ் செல்வம் வேறு என்ன இருக்கமுடியும்? அதுபோனபின் அவன் வாழ்வில் மகிழ்ச்சி ஏது? தனது முப்பதாவது வயதிலேயே மனமுடைந்து மூலையில் உட்காரும் நிலை அவருக்கு ஏற்பட்டது! அவர் கடைசியாகக் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சி உலகப் புகழ்பெற்றதாகும்! ஐரோப்பா கண்டத்தை அந்தக் காலத்தில் நடுங்கவைத்த பெருவீரன் "நெப்போலியன்" "எல்பா" தீவிலிருந்து தப்பிச் செல்ல முயற்சி எடுத்துக் கொண்டிருந்த காலை — 1815-ம் ஆண்டு, சனவரித் திங்கள் உலகப் பெருந்தலைவர்கள் ஒன்றுகூடி, ஐரோப்பாவில் மூண்டுள்ள அரசியல் கொந்தளிப்பை அடக்குவதற்கு, வழிவகைகள் காண வியன்னாவில் கூடினர்! அந்த நிகழ்ச்சியில் உலகப் புகழ்பெற்ற பாடகனாகிய பீத்தோவனுடைய கச்சேரியை ஏற்பாடுசெய்தனர்!

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 13 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (27—12—59) தனிப் பிரதி 16-காசு | இதழ் 24

ஒத்துழைப்பு நல்குவோம்

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை அடுத்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகும் நிலையில் உள்ளது. இதைப்பற்றிய பேச்சு எங்கும் எழக் கேட்கின்றோம். முதல் இரண்டு திட்டங்களில் நிறைவேறிய வேலைகள் அனைத்தும் பெரும் பெரும் செலவில் நாட்டின் ஒரு பகுதியிலேயே—வட நாட்டிலேயே — நடைபெற்றன என்பதனை நாம் பல முறை சான்றுகளோடு எடுத்துக் காட்டியுள்ளோம்.

கட்சி வேறுபாடுகளைக் கடந்து எண்ணிப்பார்த்த போது "சுதேசமித்திரன்" போன்ற இதழ்களும் தென்னாடு கவனிப்பார் அற்றுக்கிடக்கும் நிலையினைச் சுட்டிக்காட்டித் தலையங்கங்கள் எழுதியும், கேலிப் படங்கள் வெளியிட்டும் தங்கள் கருத்தினைப் புலப் படுத்தியுள்ளன.

தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பலரும், திட்டங்களைப் பொறுத்தவரை தென்னாடு புறக்கணிக் கப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர்.

வெளி மாநிலங்களிலும் இந்தக்கருத்து இருந்து வருவதை அடிக்கடி கேட்கின்றோம்.

இந்திய அரசினரின் ஆதரவில் கூட்டப்பெற்ற கல்லூரி மாணவர்களின் திட்ட அரங்கிலும், நாட்டின் எல்லாப் பகுதிகளும் ஒரே தன்மையாக வளர்ச்சி யடையவேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த முறைகேட்டுக்குக் காரணம் என்ன என் பதை ஆராயும்போது, மத்திய அரசு சொல்லும் காரணங்கள் அனைத்தும் நியாயமற்றவை என்பதோடு, ஆதாரமற்றவை என்பதும் தெளிவாகும். தென்னாடு வளமற்ற நாடு என்பதும் உள்ள வளங்கள் செயல் முறையில் இலாபம் தராதவை என்றும் சொல்லப் பட்டதும் உண்மையல்ல என்பதனை அறிந்தோர் கூறு கின்றனர்.

ஆக, எல்லா வளங்கள் இருந்தும் ஏற்ற திட்டங் கள் தீட்டப்பெறாத காரணத்தினால், பெருந்தொகை செலவில் நிறைவேறிய இரண்டு திட்டங்களாலும் தென்னாடு—தமிழகம், தான் நியாயமாகப் பெறவேண் டிய பங்கினைப் பெறாமல், பிற பகுதிகளில் நிறை வேறும் திட்டங்களை ஏக்கத்தோடு பார்த்துப் பெரு மூச்சுவிடும் அவல நிலையில் இருக்க நேரிட்டுள்ளது. இந்த நிலையில் மூன்றாவது திட்டத்தைப்பற்றிய பேச் சுக்கள் அடிபடுகின்றன. இந்த நேரத்தில் அமைச்சர் களையும், பொறுப்போடு பணியாற்ற வேண்டியவர் களையும், சில கருத்துக்களைச் சிந்திக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தென்னாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் கனிப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கும் என்று வல்லு நர்களின் தீர்ப்புக் கூறுகின்றது. செயல் முறையில் இலாபமற்றவை என்று சொல்லப்படுவதெல்லாம் உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்று இன்று முடிவாகியுள்ளது.

ஆகையினால் நீண்ட காலமாகத் தென்னாட்டு மக் களின் ஆசையாக இருந்து வரும் திட்டங்களை நிறை வேற்றவேண்டும், ஆசை, செயலாகவேண்டும் என்று அமைச்சர்களைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

அமைச்சர்களும் சில நாட்களாக மூன்றாவது திட்டத்தைப்பற்றிய சில நம்பிக்கைகளைத் தெரிவிக் கின்றனர். ஆனால் அந்தப் பேச்சுக்கள் எந்த அள வுக்கு நடைமுறையில் செயலாக்கப்படும் என்பதனை உணர்ந்து, பேச்சு, பொருள் பெற்று, செயலாக மாறு வதற்கு வேண்டிய வழிகளை மேற்கொள்ளவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மத்திய அரசினிடம் வாதாடித்தான் எதையும் பெறமுடியும் என்றால், வாதாடியும், போராடியும்தான் எதையும் பெறமுடியும் என்றால், போராடியும் தங்கள் பகுதிக்கு வேண்டியதைப் பெறவேண்டும் என்பதைப் பொறுப்பில் உள்ளோர் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கருத்தினை இன்று காங்கிரசுக் கட்சி உறுப் பினராக இருக்கும் இராசா. முத்தய்யா அவர்களே சட்டமன்றத்தில் அமைச்சர்களுக்கு எடுத்துக் காட்டி யுள்ளார்.

இங்கிலையில், அமைச்சர்கள் அனைத்துக் கட்சி யினரையும் அழைத்து, திட்டத்தைப்பற்றிய எண்ணங்

களைப் பரிமாறிக்கொள்ளவிரும்பியுள்ளனர். கொள்கை அளவில் இந்த நற்செயலை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் மாற்றுக் கட்சியினர் கூறும் கருத்துக்களை, மனதிலே வெறுப்பு இன்றி, கேட்டு ஆவனசெய்ய முயலல்வேண்டும். அல்லாமல், வெறும் கண்துடைப்பாக, "நாங்கள், மாற்றுக்கட்சியினரையும் கேட்டுத்தான் திட்டங்கள் தீட்டினோம்'' என்று நாளைக்குப் பிரச்சார மேடையில் சொல்லுவதற்காக அந்தக்கூட்டத்தைஅமைச்சர்கள் பயன்படுத்திக்கொள்ள விரும்பக்கூடாது.

ஏனெனில், நமது மாநில நிதியமைச்சர் முன்பொரு முறை "நிறையப் பணம் பெற்று என்ன செய்வது? திட்டங்களை நிறைவேற்ற நம்மிடம் வளங்கள் ஏது? ஆகவேதான் குறைவாகக் கேட்டிருக்கிறோம்'' என்ற கருத்துப்பட பேசியதாக நாளிதழ்களில் செய்தி வந்தது. ஆகையினால் தென்னாடு — தமிழகம் — வளமற்றது என்ற தமது கருத்தை மாற்றிக்கொண்டு, மாற்றுக்கட்சியினர் கூறும் யோசனைகளுக்கும் மதிப்பளித்து, நாட்டு நலனில் அக்கறைகொண்டு வளர்ச்சிக்கான வழியில் ஈடுபடவேண்டும் என்று அமைச்சர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எந்த நல்ல காரியங்களுக்கும்-அவை நாட்டுக்குப் பொதுவான நன்மைகளைத் தரக்கூடியனவாக இருந்தால், அவை நிறைவேற ஆட்சியாளர்களுடன் ஒத்துழைக்கத் தி. மு. க. தவறியதில்லை — தவறாது. எனவே கலந்தாலோசித்தல், வெறும் கண்துடைப்பாக இல்லாமல் காரியத்தில் வெற்றிபெற வேண்டுவன செய்யும் விருப்பம் உண்டாகவேண்டும். எண்ணம் களங்கமற்றதாக இருத்தல் வேண்டும். நல்லது —நாட்டுக்குத் தேவையானது — அவசியமானது என்று கருதப்படும் எதற்கும் என்றும் உண்டு எம் ஒத்துழைப்பு.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

அதுதான் அவர்கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சி!

செவிச் செல்வத்தை இழந்த பீத்தோவனுடைய வாழ்க்கையில் வறுமையும் பற்றிக்கொண்டது! பல்வேறு நோய்களும் அவரை நாடிவந்து துன்புறுத்தின! அந்தக் காலங்களில் அவர் தனது நண்பர்கள் பலரை நாடி உதவிவேண்டினார்! ஆனால் கிடைத்ததோ, ஏமாற்றமும்,ஏசலும்தான்! நண்பர்களால் உதாசீனம் செய்யப்பட்ட பின்னரும் அவர் தன்னம்பிக்கையை இழந்துவிடவில்லை! மனித சமுதாயத்திற்குத் தேவையான அரும் பெரும் கருத்துக்கள் அமைந்த பாடல்கள் எழுதுவதில் அவர் முனைந்தார்! பிற்காலத்தில் அந்தப் பாடல்களை உலகம் போற்றிப் புகழ்ந்து பாராட்டியது! ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் அவர் தங்கியிருந்த இல்லம் எப்படியிருந்தது என்று பார்த்தால், அவர் வாழ்வின் அடித்தளம் நமக்குப் புலப்படும்! ஒரு மூலையில் சிதறிக் கிடக்கும் நோட்டு புத்தகங்கள் சில! அதில் அவரால் எழுதப்பெற்ற — பிற்காலத்தில் அனைவராலும் புகழ்ந்துரைக்கப்பட்ட கவிதைகள் பல! இன்னொரு மூலையில் காலியாக்கப்பட்ட சில ஒயின் பாட்டில்கள்! மற்றொரு மூலையில் தூசி படிந்து கவனிப்பாரற்றுக் கிடந்த ஒரு பியானோ! சுத்தப்படுத்தப்படாத அந்த அறையின் அலங்கோலம் யாரையும் அருவருப்புக் கொள்ளச்செய்யும்! ஒருமுறை வீதியில் சென்றுகொண்டிருந்த பீத்தோவனைத் திருடன் என்று எண்ணிக் கைது செய்தான் ஒரு போலீஸ்காரன்! அந்த அளவிற்கு அழுக்கடைந்த உடைகளுடனும் அடர்ந்து வளர்ந்த தாடியும் முடியும் அவரைப்பற்றி மற்றவர் அப்படி எண்ணும்படி செய்தது!

இசைப்பெரு வேந்தனாகிய அவருடைய வாழ்க்கையில் இன்பமயமான பகுதி என்று சொல்லத்தக்கவை எதுவும் இல்லையென்றே கூறலாம்! ஒரு பற்றற்ற வாழ்க்கையே அவர் வாழ்ந்துவந்தார்! பார்புகழும் பெருமை பெற்ற பீத்தோவன் ஒருமுறை கூறினார் "அரசர்கள் பிறவியிலேயே அரசர்களாகப் பிறக்கிறார்கள்! அதில் பெருமை ஒன்றும் இல்லை! தனது-முயற்சியினாலேயே ஒருவன் உயர்வதானால் அதுதான் பெருமைக்குரியது! அரசர்கள் ஆயிரம் பேர் இருப்பார்கள்—பீத்தோவன் ஒருவன்தான் இருக்கமுடியும்!'' என்றாராம்! வாழ்க்கையின் அடித்தளத்திலேயே உழன்று வறுமையும், நோயும் பற்றிக்கொள்ள, இன்பமென்பதையே கண்டறியாத அந்த ஏழைக் கவிஞன்—பியானோ என்ற இசைக்கருவியினால் அந்நாட்டு மக்களின் உள்ளம் கவர்ந்த அந்த நல்லவன் வறுமையும் நோயும் தந்த பரிசால் 1826-ம் ஆண்டு உலகத் தொடர்பிலிருந்து விடைபெற்றுக்கொண்டார்! மரணப்படுக்கையில் அவர் உதிர்த்த பொன்மொழிதான் "சோகமயமான ஒரு தொடர் நாடகம் இதோ முடிந்துவிட்டது'' என்பதுதான்! அவன் உயிர் வாழ்ந்த காலத்தில் அவனைக் கவனிக்காத உலகம் இறப்புக்குப் பின் கதறியது, கண்ணீர் சிந்தியது!

★

ஒருவன் அனுபவத்திலிருந்து தனக்கு நல்லது கெட்டதைத் தெரிந்து கொள்ளுகிறான். அதிலிருந்து தனக்கு நல்லதெதுவோ, தன்னைப் போலவே மற்றவருக்கும் அது நல்லதென்றும், தனக்குக் கெடுதலானது எல்லோருக்கும் கெடுதலானது என்றும் பொதுவாக்குகிறான். அதுதான் ஒழுக்கத்தின் ஆரம்பம்.

ஏமாளியே! கேள்.

கே. கலியபெருமாள்

நண்பகல்! கதிரவன் தலைக்கு நேராகக் காட்சி அளித்தான்! அவன் கொஞ்சம்கூடக் கருணையே இன்றிக் காய்ந்துகொண்டிருந்த அந்தச் சமயத்தில்தான் வியர்வை முத்துக்களைச் சிந்திக்கொண்டேஏர் உழுதுகொண்டிருந்தான் முத்தையன். கரிய நீண்ட அவனது உடலில் மானத்தைக் காப்பதற்கென்றே அவன் அணிந்திருந்த ஒருமுழத் துணி—கோவணம்-அவனது வறுமை நிலையை எடுத்துக்காட்டிற்று என்று சொல்வதைவிட, நாட்டின் வறுமை நிலையையே பறைசாற்றிற்று என்று சொனால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும். காரணம், அவன் மட்டும் அந்த நிலையில் இல்லாதது தான். சுதந்திர நாடு என்று சொல்லப்படுகின்ற இந்திய உபகண்டத்தில் அவனைப்போல ஆயிரமாயிரம் மக்கள் முழந்துணி உடுத்தி உயிர்க்கின்றனர் அல்லவா? நடப்பதற்குக்கூட நாடியற்றிருந்த காரணத்தால் அவனது கால்கள் பின்னின. சாட்டையைத் தூக்கி மாட்டை அதட்டி ஓட்டுவதற்குக் கூட வன்மை அற்றிருந்தது அவனது கரம்.

"அப்பா! அப்பா!" என்று அன்பு ததும்பத்ததும்ப அழைத்த அவனது ஆசை மகளின் அழகுக் குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தான் முத்தையன். தன் மகள் மல்லிகா கஞ்சி கொண்டுவந்துள்ள காட்சியைக் கண்டன அவனது கண்கள். ஒரு கணம் பெற்ற பாசமெல்லாம் திரண்டு நின்றன அக் கண்களில்! துன்பத்திற்கிடையே இன்பத்தை நல்குகின்ற ஓர் உயிர் அவனுக்காக இருக்கிறது என்று சொன்னால், அது மல்லிகாவைத் தவிர வேறு யாராகவும் இருக்க வியலாது.

மல்லிகா முத்தையனுடைய கடைசி மகள், மூன்று பெண் மக்களுக்குத் தந்தையான முத்தையனுக்கு ஆண் மகன் ஒருத்தன் கூட இல்லாதது ஒரு பெரிய குறை. வலக்கரமே இல்லாதது போன்ற குறை! பெற்ற குழந்தைகளையும் பெண்ணாகப் பெற்றுவிட்டு இவ்வுலகைவிட்டே மறைந்துவிட்ட தன் மனைவியை நினைக்கின்ற பொழுதெல்லாம் அவன் கண்ணீர் விட்டுக் கலங்காமல் இருக்கவே மாட்டான்!

"வாம்மா மல்லிகா! வா, உட்கார். இதோ வருகிறேன்" என்றெல்லாம் அவன் தன் மகளை வாயால் வரவேற்கவில்லை. ஆனால் அவனது கண்கள் பற்பல வரவேற்பு இதழ்களை அவளுக்கு வாசித்தளித்தன.

நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை வழித்து நிலத்தில் விட்டவண்ணம், மல்லிகா அமர்ந்திருந்த மரத்தடிக்குச் சென்றான் முத்தையன். தனது உழைப்பாளி மகனின் வியர்வைத் துளிபட்ட நிலமடந்தை புளகாங்கிதம் எய்தினாள்!

"சாப்பாடு கொண்டுவந்திருக்கிறேன்," என்று தன் அருகில் அமர்ந்த தந்தையை நோக்கி அவள் வந்த காரணத்தைப்பற்றி விவரிக்கவில்லை. ஆனால் அவள் தன் தளிர்க்கரங்களால் கஞ்சிக் கலயத்தைத் தந்தைக்கு நல்கிய முறை அப்பொருள்பட அமைந்திருந்தது.

கஞ்சிக் கலயத்தைக் கையில் பெற்றவண்ணம், "நீ சாப்பிட்டாயா அம்மா?" என்று கனிவுடன் விசாரித்தான் முத்தையன்.

"நான் சாப்பிட்டுவிட்டேனப்பா" என்று சொன்னவண்ணம் ஊறுகாயைத் தந்தையின் கையில் வைத்தாள் மல்லிகா.

அதை அன்போடு வாங்கிக் கஞ்சியை அருந்தும்போது இடையிடையே சுவைத்தான் அந்த ஊறுகாயை.

அவனது முகத்தில் படர்ந்திருந்த கவலைரேகையை எப்படியோ கண்டுகொண்ட மல்லிகா, "ஏனப்பா என்னவோபோல் இருக்கிறாய்?" என்றாள்.

"ஒன்றுமில்லை மல்லிகா! ஒரே வெயில். களைப்பாக இருக்கிறது. அவ்வளவுதான்" என்று தன் உள்ளத்தில் உள்ளதை மகளிடமே மறைத்துப்பேசினான் முத்தையன்.

"இல்லையப்பா! உங்கள் மனதில் ஏதோ குறை இருக்கிறது."

"என்னம்மா உளறுகிறாய்? குறையா? நீ இருக்கும் பொழுது எனக்கது எப்படியம்மா வரும்?"—சிரித்துக்கொண்டே பேசினான் முத்தையன்.

அவனது பொய்யான சிரிப்பை மெய்யென்று கருதிய மல்லிகா கால்வாயில் ஓடும் நீரில் கலயத்தைக் கழுவிக் கரத்தில் ஏந்திய வண்ணம் வீடுநோக்கி நடந்தாள் "போய் வரட்டுமாப்பா?" என்ற கேள்வியோடு புன்னகை ஒன்றையும் சிந்திவிட்டு.

கோவணத்தின் ஒரு மூலையிலே முடிபோட்டு வைத்திருந்த வாடி வதங்கிய வெற்றிலையை எடுத்து அதனுடனிருந்த பாக்கு, சுண்ணாம்புடன் அதை வாயிலிட்டு மென்ற வண்ணம் புகையிலைக் காம்பைக் கிள்ளிக்கொண்டே சற்று இளைப்பாறினான் முத்தையன்.

"ஐயோ! மகளே! என் முகவாட்டத்தைக் கணப்பொழுதில் கண்டு கொண்டாயே அம்மா! 'குறையா? நீ இருக்கும்பொழுது எனக்கது

எப்படியம்மா வரும்?'' என்று கேட்டல்லவா உன் வாயை நான் மூடிவிட்டேன். உண்மையைச் சொல்லப்போனால், நீதானே அம்மா என் முகவாட்டத்திற்குக் காரணம்! அதை நான் உன்னிடமே எப்படி மல்லிகா சொல்வேன்? சொன்னாலும் நீ என்னைக் கையாலாகாத தந்தை எனக் கருதினாலும் கருதக் கூடுமல்லவா?'' என்றெல்லாம் தனிமையில் அவன் வாய்விட்டுக் கூறிப் புலம்பவில்லை. என்றாலும் அவன் மனம் அவ்வாறெல்லாம் புலம்பிற்று.

உண்மையிலேயே அவனது மனக்கவலைக்கு அவள்தான் காரணம். மல்லிகா பருவமெய்திய பாவை. மணவினை முடித்து மணாளனுடன் இன்பபுரியிலே இனிது வாழவேண்டிய எழில் மங்கை. அத்தகையவளின் அன்பு வாழ்க்கை மலரவேண்டுமானால் பணம் வேண்டும். பணத்திற்கு எங்கே போவான முத்தையன்?

அவனுக்கு இருப்பதெல்லாம் அந்த ஒரு ஏக்கர் நிலம்தான். அதன் மீதும் எண்ணூறு ரூபாய் கடன் இருந்தது. குடியானவன் குடும்பமே கடனுக்குள்ளாவது—திருமணம் போன்ற செலவினங்களினால்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. மூத்த இரு பெண்களின் திருமணத்திற்கெனவும், தன் மனைவியின் காயலாவிற்கெனவும் சிறுகச் சிறுக அவ்வூர் மிராசுதாரிடம் வாங்கியதொகை எண்ணூறு ரூபாயாகச் சேர்ந்துவிட்டது. கடன்பட்ட அந்தப் பணத்திற்கு அவனுக்கே உரித்தான அந்த ஒரு ஏக்கர் நிலத்தை மிராசுதாரிடம் அடமானம் வைத்திருந்தான் முத்தையன்.

முத்தையனின் பரம்பரையே ஏழைப் பரம்பரை; பஞ்சத்திற்கும் பட்டினிக்கும் ஆளாவதற்கென்றே அவதரித்த பரம்பரை. முத்தையன் பெற்றிருந்த அந்த ஒரு ஏக்கர் நிலமும்—தமிழகம் தந்த சொத்தல்ல. தமிழகத்திலே உழைத்த உழைப்பின் பயனாகப் பெற்ற சொத்தல்ல. சின்னஞ்சிறு வயதிலே பெற்றோர்கள் அற்றவனாய்—அனாதையாய் ஆக்கப்பட்ட முத்தையன் பெரும் பட்டினியே தனக்குக் கிடைத்த பரிசு என்ற காரணத்தால் சிங்கப்பூர் சென்று சிறுசிறு வேலைசெய்து சேமித்த பணத்தைக்கொண்டு, அங்கேயே ஒரு சிறிய தேநீர்க்கடை வைத்து, அதன்மூலம் ஈட்டிய பணத்துடன் சொந்த மண்ணை மறவாமல் வந்து சேர்ந்தவன் முத்தையன்.

ஈட்டிய பணத்தைக்கொண்டு எப்படியேனும் முன்னுக்கு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு சொந்த ஊரிலேயே ஒரு ஏக்கர் நிலத்தை விலைக்குவாங்கி, உழுது பயிரிட்டு, ஒத்த மனமுடைய ஒருத்தியை உவப்போடு மணம்புரிந்து, சிலகாலம் இன்பவாழ்வு நடாத்திய முயற்சியாளன் முத்தையன்.

தன் இல்லக்கிழத்தியுடன் இணைந்து நடத்திய இன்பவாழ்வின் பயனாக மூன்று குழந்தைகளை ஈன்றுவிட்டு இறந்தாள் அவனுடைய இன்னுயிர் நாயகி. அவள் இறந்த அக்கணமே முத்தையனின் இன்பம், நிம்மதி எல்லாம் இறந்துவிட்டன. ஆனால் அவன் மட்டும் இறப்பிற்கும் வறுமைக்கும் இடையே சிக்கி இன்னலுறுகின்றான்!

பெற்ற மக்களைப் பேணி வளர்த்தான். முதல் இருவருக்கும் மணவினையும் முடித்தான். இறுதிமகள்—இளஞ்செல்வி மல்லிகா இருக்கிறாள். முத்தையனோ யாது செய்வதென்றறியாது திகைக்கிறான். பட்ட கடன் போதாதென்று இனியும் அந்நிலத்தின்மேல் கடன்படுவதா? பட்ட கடனுக்கே வருடா வருடம் வட்டி கட்டக்கூட வருமானம் கிட்டவில்லையே அவனுக்கு! இனியும் கடன்பட்டால் எப்படி மீள்வான்? தமிழகத்தை விட்டுப்பிரிந்து அயல்நாடு சென்று தன்னந் தனியாகப் படாத சிறுமையெல்லாம் பட்டு ஈட்டிய சொத்தை எப்படி இழக்கத் துணிவான்? முத்தையன் இவற்றையெல்லாம் நினைத்து நினைத்து நெஞ்சம் நெக்குருகினான். கண்ணீர் சிந்திக் கலங்கினான். அவனைத் தேற்றுவார் அற்ற காரணத்தால் ஆற்றொணாத் துயரில் ஆழ்ந்தான்.

தன்னுடைய வயலையெல்லாம் பார்வை இட்டுக்கொண்டு அந்த வழியே வந்த மிராசுதார், முத்தையன் கண்கலங்குவதைக் கண்டார். காரணம் யாதென வினவினார். அவனுடைய உள்ளத்துயரையெல்லாம் மிராசுதாரிடம் அப்படியே ஒப்பித்துவிட்டான் முத்தையன். முத்தையனின் புலம்பலையெல்லாம் அமைதியோடு கேட்டுக்கொண்டிருந்த மிராசுதார் அவனுக்கோர் அழகான யோசனை சொன்னார்!

"முத்தையா! பாவம்; நீயும்தான் கவலைப்படுகிறாய். வேண்டுமானால் நான் ஒரு யோசனை சொல்கிறேன் கேள்'' என்ற பீடிகையோடு ஆரம்பித்தார்.

"என்ன யோசனைங்க? சொல்லுங்க. நீங்கள் சொன்னால் நான் தட்டுவேனுங்களா,?'' என்று அளவுக்கு மீறிக் குழைந்தான் முத்தையன்.

"திராவிட நாடு" பொங்கல் மலர், விலை ரூ. 1--00

ஏஜண்டுத் தோழர்களுக்கு

பொங்கல் மலரில் அண்ணா அவர்களின் கருத்துப் படையல்களே, அதிகம் இடம் பெறுவதால், தாங்கள் முன்னதாகத் தேவையான காப்பிகளுக்கு ஆர்டர் தருவதுடன், மலர் 1-க்கு 0—75 காசு வீதம் முன்பணம் அனுப்பிவைக்கவும். 28—12—'59க்கு மேல் வருகின்ற ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

பொறுப்பாளர்.
"திராவிட நாடு"

முக்கிய அறிவிப்பு:— பழையபாக்கி வைத்திருப்பவர்கள், பாக்கி முழுவதையும் மலருக்குரிய முன்பணத்தோடு சேர்த்தனுப்பினாலன்றி, மலர் அனுப்பப் படமாட்டாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"வேண்டுமானால் நான் ஒரு இருநூறு ரூபாய் தருகிறேன். அதற்குள் எப்படியாவது உன் மகள் கல்யாணத்தை முடித்துவிடு."

"என்னுங்க, பழைய பாக்கியெல்லாம் அப்படியே இருக்குது. புதிசா வேறு வாங்கிட்டா.........

"அடடா! அதை யாரப்பா உன்னைக் கேட்டார்கள்? அது கிடக்கட்டும். அதற்கென்ன இப்பொழுது அவசரம்? உனக்கு எப்பொழுது மிச்சப்படுகிறதோ, அப்பொழுது கொடு, போதும். உன்மீது எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லையா என்ன?"

"அப்படின்னு, உங்கள் விருப்பப்படி செய்யுங்க."

"ஆமாம், மாப்பிள்ளையெல்லாம் பார்த்தாகி விட்டதோ?"

'நீங்க ஒண்ணுங்க! மாப்பிள்ளை பார்க்கச் சீமைக்கா போகப் போகப் போறேன். என் பெண்டாட்டிக்குத் தம்பி முத்துமுத்துண்ணு ஒருத்தன் இருக்கான். அவனுக்குக் கட்டிப் போட்டாப் போகுது."

"சரி சரி. அப்படியானால் ரொம்ப நல்லது. கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்யப்பா. நீ. பணத்தைப் பற்றிக் கவலைப் படாதே."

முத்தையனுக்கு உச்சி குளிர்ந்தது!

திருமணம் நிச்சயமாயிற்று. திருமணத்திற்கு ஒரு வாரமே இருந்தது. பணம் கேட்பதற்காக மிராசுதாரின் வீட்டிற்குச் சென்றான் முத்தையன்.

"வாப்பா முத்தையா! வா. என்ன சேதி?"—ஒன்றும் தெரியாதவர்போல பேசினார் மிராசுதார்.

"நல்ல சேதிதானுங்க. கல்யாணம் இன்னும் ஒரு வாரந்தான் இருக்குது. உங்களை நம்பித்தான் இருக்கேன். பணம் கொஞ்சம் கொடுத்தால் தேவலை."

"ஓஓ! அதுவா? அன்றொரு பேச்சு, இன்றொரு பேச்சா பேசப் போகிறேன்? வாயைத் திறந்து சொல்லிவிட்டேன். இனி இல்லேன்னு சொல்ல முடியுமோ?"

"முடியாது, முடியாது," என்று பலமாகத் தலையை ஆட்டினான் பக்கத்தில் இருந்த வேலைக்காரன்.

"ஆனால், இரண்டு நாட்களாக எனக்கொரு யோசனை தோணுது."

"என்ன யோசனைங்க?" — முத்தையனின் குரலில் ஆர்வம் பொங்கிற்று.

"இப்பொழுது நான் உனக்கு இருநூறு ரூபாய் கொடுப்பதாக வைத்துக்கொள். அதை வாங்கிக் கல்யாணத்தைத் தடபுடலாக நடத்தி விடுவாய். ஆனால் நாளைக்குக் கொடுக்கவேண்டுமென்ற அக்கரை ஏற்படுமோ?"

"ஏற்படாது, ஏற்படாது."–இது வேலைக்காரனின் ஒத்தூதல்.

'ஆகையால்தான் நான் சொல்கிறேன், முதலில்பட்ட கடனோடு இதையும் சேர்த்து ஆயிரத்திற்கு நிலத்தைக் கிரயம்கொடுத்துவிடு."

"ஆ! ... கிரயமா? ... ஆயிரத்திற்கா? ..."

"பொறப்பா முத்தையா! பொறு. அதற்குள் அவசரப்படுகிறாயே. கிரயம்தான் என் பேருக்கே தவிர, உரிமையெல்லாம் உனக்குத்தான். நீயே நிலத்தை உழு; பயிரிடு. அதில் வருகிற வருமானத்தை நீயே சாப்பிடு. நீ சாப்பிட்டு மிச்சப்பட்டால் அதை எனக்குக் கொடுத்துக் கடனைத் தீர்த்துக் கொள். பழையபடி உனக்கே நிலத்தைக் கொடுத்துவிடுகிறேன். எப்படி என் யோசனை?"

ஒரு கணம் எதையோ யோசித்த முத்தையன்," நீங்கள் சொல்வதெல்லாம் சரிதானுங்க. ஐந்து ஆண்டுக்காவது எதிர்நடை தாங்களேன்," என்றான்.

"யாரப்பா நீ, சுத்தப் பைத்தியமாக இருக்கிறாய். ஐந்து வருடமென்ன, பத்து வருடமென்ன, இருபது வருடமென்ன, நீயே பயிர் செய். எழுதிக் கொடுத்தால்தான் எதிர்நடையா? வாய் மொழியாக இருந்தால் போதாதா? என்மேல் அவ்வளவு நம்க்கை இல்லையா? உன்னை நான் ஏமாற்றிவிடுவேனா?"

"ஐயயோ! அப்படியெல்லாம் நான் சொல்வேனுங்களா?"

"பின் ஏன் பயம்? இதோ பார். முத்தையா! ஆண்டவன் சாட்சியாகச் சொல்கிறேன், உனக்கு நான் துரோகமே செய்யமாட்டேன்."

"அப்படியெல்லாம் சொல்லாதிங்க. உங்க இஷ்டப்படியே செய்யுங்க."

அந்த ஒரு ஏக்கர் நிலம் மிராசுதாரின் பேருக்குக் கிரயம் செய்யப்பட்டது. இருநூறு ரூபாய் முத்தையன் கைக்கு வந்தது. மல்லிகாவின் திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. இருபதாயிரம் ரூபாய் செலவில் திருமணம் நடத்துபவர்கள் எத்தகைய மன மகிழ்ச்சி கொள்வார்களோ, அத்தகைய மனமகிழ்ச்சியை இருநூறு ரூபாய் செலவிலும் இவர்களால் காணமுடிந்தது.

தன் இறுதி மகளின் திருமணத்தைப் பொலிவு பொருந்திய முறையில் முடித்துவிட்ட பூரிப்பில் முத்தையனுக்குத் தலைகால்தெரியவில்லை. திருமணத்திற்குத் தொடர்புள்ள வீண் சடங்குகளையெல்லாம் முடித்துக்கொண்டு பழைய குடித்தனம் நடத்த முத்தையனுக்கு இரண்டு வாரம் பிடித்தது.

இரண்டு வாரத்திற்குப்பின் ஒரு நாள் அவன் தன் வயலை எட்டிப் பார்த்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவன் இதயத்தை ஈட்டிகொண்டு பிளந்தது. அவனுடைய நிலத்திலே நெல் நடவு நட்டிருப்பதைக் கண்டான் அவன். ஆம்; அன்று அவன் தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ அரும்பாடுபட்டு ஆழ உழுதானே. அதே நிலத்தில்தான்! நிலத்தை ஒரு முறை சுற்றிவந்தான். அவன் நிலத்தின் எல்லைக்கல் இல்லாமலிருத்தலைக் கண்ட அவன் நெஞ்சம் துணுக்குற்றது. அருகில் வந்த மிராசுதாரின் கணக்கப்பிள்ளையை நோக்கினான். அவன் கண்கள் கனல் கக்கின! உள்ளம் எரிமலையெனக் குமுறிற்று! குமுறிய எரிமலை வெடித்தது! "என்ன வேலையய்யா இது?" என்ற வார்த்தைகள் தீப்பொறிகளெனத் தெறித்தன!

"இதோ பார் முத்தையா! என் மேல் கோபங்கொண்டு பயனில்லை. அன்று நீயேதானே நிலத்தைக் கிரயம் செய்துக்கொடுத்தாய்?"

"உண்மைதான். ஆனல்..."

"ஆனல், என்னப்பா, ஆனல்? அன்று அவர் அநேகம் சொல்லியிருப்பார். அதன்படியெல்லாம் நடக்கிறதென்பது ஆகிற காரியமா? இந்த வட்டாரத்திலேயே இந்த ஒரு ஏக்கரைத் தவிர மற்றதெல்லாம் அவருடையது. இதையும் சொந்தமாக்கிக்கொண்டால் நன்றாயிருக்குமென்றெண்ணினார்.

(10-ம் பக்கம் பார்க்க)

ஓர் ஆசிரியன்

அறிவழகன்

"இடுக்கண் வருங்கால் நகுக" என்றார். அந்த நேரம் மட்டுமன்றி எந்நேரமும் சிரிக்கலாம். அது உடலுக்கும் நல்லது உள்ளத்திற்கும் உகந்தது. அம்மட்டோடல்லாமல் நம்மை அடிக்க வருவோரிடத்திலும் அடக்கவருவோரிடத்திலும் சிரிக்கலாம். அதனால் நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள முடியும்.

ஆசிரியத் தொழில் புரியும் எனக்குச் சிரிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. பள்ளியில் மட்டுமல்ல, வெளியிலும்தான். காலை எட்டுமணிக்கெல்லாம் பள்ளிக்கூடம் புறப்பட்டுவிடுவேன். வழியில் கடன் கொடுத்தவர் வருவார். அவரைக் கண்டதும் சிரிப்பேன். அவரும் இது தகாது, உடனே கவனித்துத் தந்துவிடு என்பார். அடுத்து ஒரு கிராமத்தார் வருவார். அவரின் அருமை மகனுக்கு அஞ்சல் எழுதித் தரும் படிபணிப்பார். எழுதுவேன் அதற்குள் அவரின் பேச்சை முன்னிட்டுப் பல சிரிப்புக்களை உதிர்ப்பேன். இந்தப் பத்திரத்துக்கு வட்டி பார் வாத்தியாரே என்று ஒருவர் வருவார். நான் கணக்கிடுவதற்குள் பத்திரத்தின் வரலாற்றைக் கூறிடும் அவரின் பெருந்தன்மைக்குப் பல சிரிப்புகள் சிரித்து ஆமாம் போடுவேன், பள்ளிக்கூடத்தை அடைந்ததும் ஆர்ப்பாட்டத்தோடு ஒரு அம்மையார் வருவார், "ஏனய்யா வாத்தியாரே, நீ புள்ளைகுட்டி பெக்கலையா? என் மகனை அப்படியா அடிப்பது! இரவெல்லாம் சுரமா அடிச்சுதே! என்று அதட்டுவார்; அங்கும் ஒரு சிரிப்பு. தணிக்கையாளர் வருவார், கண்டதும் வாய் முறுவலிக்கும். இதனால் தான் சற்று நிம்மதி காண்கின்றேன்.

நான் செய்யும் தொழில் ஒப்பற்றது. உலகத்தார் மதிக்கத்தக்கது தான். அப்பெருமையினாலேயே இத்தனை நாட்களையும் கழித்து விட்டேன். எதிர்காலச் சந்ததிகளை உருவாக்கும் இதற்கிணை ஈதே என்றெண்ணி இறுமாந்திருந்து விட்டேன். என்றாலும் அது நிலைக்கவில்லை. உள்ளத்தில் வேதனை வளர்கிறது. உற்சாகம் இழந்து வருகிறேன். நிம்மதி காணாது தவிக்கிறேன். வலுவில்

அ. பேரண்ணல்

தொழிலில் நாட்டம் கொள்ள வேண்டியுள்ளது. நரைத்து நாடி தளர்ந்து வயது முதிர்ந்துவிடவில்லை. என்னுடைய தொழிற் காலமே மூன்றாண்டுகள்தான். இக்குறுகிய நாட்களிலேயே நான் முணுமுணுக்கிறேன் என்றால் காரணம் என்ன?.........

ஒன்பது மணிக்குப் பள்ளியைத் துவங்குகிறேன். எழுபது பிள்ளைகளையும் ஐந்து வகுப்புகளில் அமர்த்தி அடக்குகிறேன். காலை வருகையைப் பதிவுசெய்து ஒவ்வொரு வகுப்பிலும் நாளிட்டுக் கரும்பலகையில் குறிப்பிடுகிறேன்.

பாடபோதனை துவங்குகிறேன். ஒரு வகுப்பிற்குத் தமிழ்ப் பாடம், மற்றொன்றிற்குக் கணிதம். பிறிதொன்றிற்கு மௌன வாசிப்பு. அடுத்ததற்கு சித்திரம், எஞ்சியதற்கு இசை எனப் பிரித்துக் கொள்கிறேன். என் செய்வேன்? ஓர் ஆசிரியனாயிற்றே! உதவி ஆசிரியர் வேண்டுமென்றால் சராசரி வருகை எழுபது தேவையாம். எந்த வகுப்பை நான் ஒழுங்காகக் கவனிப்பது என்பதே புரிவதில்லை. எந்தப் பாடத்தையும் நன்முறையில் நடத்தவும் முடிவதில்லை. ஓவென்ற கூச்சலை அடக்குவேனா. அதற்குள் ஏற்படும் யுத்தங்களைத் தடுப்பேனா? என்னசெய்வதென்று கூடச் சில நேரங்களில் தெரிவதில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் என்னையும் கூட்டத்திலிருந்து தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

உண்மையான போதனை புரிய வேண்டுமென்றால் ஒரே வகுப்பு இருந்தால் போதும். மேலும் அதிக உழைப்பைத் தரவேண்டுமானால் ஒரே பாடம் "பாட ஆசிரியர்" முறையில் போதனை நடத்துவது சிறந்தது. அங்ஙனமின்றி நான் ஒருவனே இசைப் பயிற்சி தருவேனா? ஓவியத்தைப் பழக்குவேனா? தமிழ்மொழியைத்தான் தரமாக கற்பிப்பனோ! புதிய பாடதிட்டத்தில் புத்துலகைச் சமைக்கத் திட்டமிட்டுச் சமூக பாடத்தை அகலப்படுத்தியுள்ளனர். உண்மையில் நான் அதைப் படித்துக் காட்டவும் நேரமின்றித் தவிக்கிறேன். விஞ்ஞானத்தை வெளியில் சென்று காண்பிப்பது எங்கே? விளையாட்டில் பழக்கத்தை உண்டாக்குவதெங்கே? என்றாலும் மாணவர்களின் மகிழ்வான முகங்களைப் பார்த்துத்தான் நானும் என் வருத்தங்களை எல்லாம் மறந்து நாட்களைக் கழிக்கின்றேன்...

அன்றொருநாள் பெரிய மனிதர் ஒருவர் வந்தார். நீர்தானா வாத்தியார் என்றார். ஆம், என்றேன்.

"என்னை ஏன் வந்து பார்க்கவில்லை?" நான் சிரித்தேன்! சினம் கொண்டார்!!" என்னைப்பற்றி உனக்குத் தெரிந்திருக்கும்! என பேச்சுக்கு எதிர்ப் பேச்சில்லை ஊரில்" என்றார். மேலும் சிரித்தேன்! 'என்ன" என்றார். மேலே கூரையைக் காட்டிப் பகலவன் பள்ளியுள்ளே பவனி வருவதையும் காட்டினேன். பரவாயில்லை பார்த்துக் கொள்கிறேன் என்றாரே...!!!

"மதிய உணவு ஆரம்பிக்க வேண்டும். இன்றேல் ஏன் உம்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடாது." இந்தச் சொற்கள் என் மனதைத் துளைத்துக்கொண்டே இருக்கின்றன. உத்தியோகம் நிலைக்கவேண்டுமென்றால் கட்டளையை நிறைவேற்றியே தீரவேண்டும். ஒன்றுமே புரியவில்லை. உள்ளம் சோர்ந்தேன். உதவி செய்வார் யார் என்று ஏங்கினேன். பத்துப் பிள்ளைகட்காகிலும் பகல் உணவு போட்டே தீரவேண்டும். அப்படிப் போடவேண்டுமென்றால் என்னிடம் கையிருப்பு மட்டும் ரூபாய் அறுபதிற்கும் மேலான மதிப்புள்ள உணவுப் பொருள்கள் இருக்கவேண்டும்.

ஏழைக் கிராமம். எண்ணிப் பார்த்தால் நாற்பது வீடுகள் இருக்கும். அன்றாட உழைப்பால் உயிர் வாழ்பவர்கள், தனவந்தர் எனத் தக்கதோர் எவருமில்லை. ஊர்ப் பெரியவர்களை எல்லாம் சந்தித்தேன். அரசாங்கத்தின் திட்டத்தை விளக்கினேன். ஏழைப் பிள்ளைகட்கு உணவளிக்க வேண்டுமென்றேன். நல்ல திட்டம்தான். எல்லாபிள்ளைகட்குமே உணவு போடுவதுதான் சரி என்றனர். அப்படி என்றால் நீங்கள் மூன்று மாதங்கட்குக் கையிருப்பு ரூபாய் நானூற்று இருபதிற்கும் மேலாக வசூலிக்கவேண்டுமென்றேன். "அப்படியா" என்றனர், "ஆகட்டும் பார்க்கலாம்" என்று சென்றனர். அடுத்த நாள் சென்றேன். ஆனமட்டும் முயற்சித்தேன். முடிவு எனக்கே வியப்பாகிவிட்டது. யார் மீது நோவது? நானே நொந்து கொண்டேன். மீண்டும் உத்தரவு நினைவுக்கு வந்தது. பத்துப்பிள்ளைகட்கு ஆகிலும் உணவளிக்கவேண்டும். அதற்கு ஒரு வழி உண்டு, என்றால் அது என் ஒரு மாதச் சம்பளம்தான்! அப்படியானால் என் கதி!

மாணிக்கம்

அப்படி என்ன பெரிய உத்தியோகம் பார்க்கிறான் அந்த அறிவழகன். அவனுக்கு என் அல்லியைக் கொடுத்தால் அவள் கதி என்னவாகும். பின்னால் சோற்றுக்கும் துணிக்கும் போதாமல் கண்ணீரும் கம்பலையுமாய் அவதிப் படுவதை யார் பார்க்கிறது? அவன் சம்பளம் அறுபத்து ஆறுதானே! அதைக்கொண்டு அப்பா, அம்மாவைக் காப்பாத்தவே முடியாது. தம்பியை வேறு காலேஜில் சேர்த்திட்டான். கேட்கணுமா! அரிசிக் கடையில் பாக்கி, மளிகைக் கடையில் துணிக்கடையில் எங்கும் பாக்கிதான். இந்நிலையிலே மத்தியானச் சாப்பாடு போட இங்கு நன்கொடை வசூலிக்கப் போகிறார். இவனை நம்பி எவன் பெண் தருவான்! மாதா மாதம் பாக்கியைக் கொடுத்தாத்தானே! சம்பளம் வரலே, அடுத்தமாதம் என்று வேறு தொல்லை தருகிறானும்.

இதெல்லாம் தெரிந்திருந்தும் என் மனம் எப்படி இடங்கொடுக்கும். எனக்கென்ன மூன்று நான்கு பெண்களா இருக்கு, இருப்பது என் அல்லி ஒன்றுதானே. நல்ல இடத்திலே கொடுத்து நாகரிகமா வாழ வைக்கணும்'னு பார்க்கிறேன். உங்களைப்போல நியாயம் பேச வருபவர்கள் "அறிவழகனுக்கு உங்க பெண்ணைத் திருமணம் செய்து வையுங்க, அவனும் முன்னுக்கு வருவான்." அப்படி இப்படி என்கிறீர்கள். எப்படித்தான் முன்னுக்கு வருவான் என்று தெரியலே. என்றைக்கும் இந்த உதட்டை விற்று வாழும் உத்தியோகம் தானே. இப்பொழுது நான் பார்த்திருக்கிற பையன் பட்டணத்தில் குமாஸ்தாவாகத்தான் இருக்கான். எதிர் காலத்தில் நல்ல சம்பளம் வாங்குவான், முன்னேறுவான் என்கிறார்கள். அப்படி எவனுக்காகிலும் கொடுத்து நல்ல மாதிரியாகப் பார்க்கத்தானே பெண்ணைப் பெற்றவர்கள் நினைப்பார்கள். அவர்களுக்குத்தானே தெரியும் பெண்ணின் அருமை. எப்பவோ சொன்ன பேச்செல்லாம் இப்ப சொன்னா நடக்குமா? ஆயிரங் காலத்துப் பயிராச்சே.

அல்லி

ஆயிரங்காலத்துப் பயிராக இருந்தால்தான் என்ன? யோசிக்க வேண்டாமா! நான் இல்லை என்றால் என் அத்தானுக்கு வேறு பெண்ணே இல்லையா. அவர் வாழ்வு மலராமலா போகும்! நல்ல நிலைக்கு வராமலா இருந்திடுவார்!!

பட்டணத்து மாப்பிள்ளையை விட இவர் ஒன்றும் குறைவாகப் படிக்கவில்லை. இவர் கல்லூரியில் கூட இரண்டாண்டுகள் படித்திருக்கிறார். ஆசிரியப்பயிற்சி வேறு இரண்டாண்டுகள். என்ன செய்வார்? இந் நாடாள்வோரின் நல்லாட்சியில் அவரின் நடுத்தர (Secondary Grade) தகுதிக்குத் தரவேண்டிய ஊதியம் தராமல் ஆரம்ப ஆசிரியர் (Elementary Grade) ஊதியத்தைக் கொடுத்து அவரை அவமானப்படுத்துகிறது. நடுத்தர ஆசிரியர் என்ற நற்சாட்சிப் பத்திரத்தை வழங்கிய கல்வி இலாகாவிற்குத்தான் என்ன மதிப்பு இருக்கிறது? இதெல்லாம் என் அப்பாவுக்கு ஏன் தெரியப் போகிறது. என் நலனைக் கருதுவதாய்க் கூறிக்கொண்டு என் நிலைமை புரியாமல் பேசுகின்றார். எத்தனையோ நாட்களாக எழுப்பி வந்த எங்கள் இன்பக் கோட்டைதனை இடித்துவிடப் பார்க்கின்றார். எங்ஙனம் நான் சகிப்பேன் அவரின்றி எவ்விதம் நான் உயிர் வாழ்வேன். மச்சுவீட்டில் காணமுடியாத இன்பத்தை என் அத்தானின் மண்குடிசையில் பார்க்க விரும்புகின்றேன். ஆனால் இவரோ இதயத்தை இரும்புப் பெட்டியாக்கிக் கொண்டு பணக்காரன் எவன் என்று தேடுகின்றார். பேச்சில் மட்டும்தான் பெண்ணுரிமை. வீட்டில் மட்டும்தான். பெண்கள் பெரியவர்களை எதிர்த்து ஒரு வார்த்தை பேசிவிட்டால் அடுக்குமா? நம் மதிப்பெங்கே? அந்த அறிவழகன் எங்கே? பொருந்துமா? என்று பேதம் கற்பித்து எங்களைப் பிரித்திடவே பார்க்கின்றார். என் செய்வேன்?

அறிவழகன்

அன்று வந்த மடலைக் கண்டதிலிருந்து என் மனம் என்றுமில்லாத் துன்பத்தால் துடித்தது. எத்தனையோ இடுக்கண்கள் வந்த போதெல்லாம் நான் சிரித்திருக்கின்றேன். ஆனால் இத்தகு வெங்கொடுமைதனைச் சகித்துக் கொண்டு என்னுள்ளம் சிரிக்கவில்லை. சிந்துகிறேன் கண்ணீரை; சீர்கெட்ட சமுகத்தில் செல்வம் படைத்தோர்க்கே சிறப்பு என்ற

நிலைகண்டு நான் சிந்தை மிக நோகின்றேன். அன்போ, பண்போ பெற்றிராவிடினும் பணம் படைத்திருந்தால் போதும் என்று நினைக்கின்றார் என்னருமை மாமா மாணிக்கம். என்னைத்தான் கேவலமாய் மதித்தாலும், அன்னவரின் ஆசை மகள் அல்லியின் உள்ளத்தை அறிந்தாகிலும் நடந்திடக் கூடாதோ! பொங்கிவரும் அன்பை எல்லாம் ஒன்றுகூட்டிப் போக்கிடம் எங்கே எனக் கேட்டிருக்கும் என் அல்லியின் கடிதத்தை உங்கள் பார்வைக்கும் தருகிறேன்—படியுங்கள்.

அத்தான்,

நம் அந்நாள் வாழ்க்கை! அதை நினைக்கும்போதே நெஞ்சம் பஞ்சிலிட்ட தீயெனப் பற்றி எரிகிறது. பஞ்சை என்றும் பணக்காரன் என்றும் பேதம் காட்டி, அன்று முதல் வளர்த்து வந்த நம் அருமைக் காதலை அழித்திடவே பார்க்கின்றார் என் அப்பா. எழுத மனம் புரியவில்லை.

எவ்வளவோ எடுத்துரைத்தும் என் வார்த்தையை ஏற்றிடாமல் மாற்றானுக்கென்னை மணம் முடிக்கப் பார்க்கின்றார். பெண்ணினத்திற்கே இதனால் பெரும் கேடு என்றுரைத்தேன்! 'பேசாதே' என்கிறார்! எவ்விதம் நான் சகிப்பேன். உங்களையன்றி இவ்வுலகில் எங்ஙனம் நான் உயிர்வாழ்வேன். உங்கள் பதிலை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும்,

உங்கள், அல்லி.

உரிமையோடு உங்கள் அல்லி என்று எழுதிய என் அல்லி இல்லாமல் நான் மட்டும் வாழ்ந்தென்ன! என் பதிலுக்காக எதிர்பார்த்து ஏங்கும் அவளுக்கு என்ன பதில் விடுப்பதென்று தோன்றவில்லை. பேதமற்று வளர்ந்த எங்கள் காதல் வாழ்வில் இப்படியும் ஓர் பாதகம் நடந்திடும் என்று எண்ணவில்லை. பண்ணமைத்துப் பாட்டிசைத்து வண்ண மலர்ச் சோலையிலே புள்ளினமாய்ப் பறந்திட்ட அந்த நாள் வாழ்க்கைதனை நினைத்திட்டால் வேதனையால் வாடுதென்நெஞ்சம். வாழ்க்கையில் ஓர் திருப்பதை வகுத்துத்தான் தீரவேண்டும் வேறென்ன செய்வேன்?

அல்லி

என்று வரும் முடங்கல் என்று ஏக்கமுடன் காத்திருந்தேன்! கண்டேன்!! களிப்புற்றேன்!!! எனக்காக என் அத்தானின் தியாகத்தை எண்ணி எண்ணி இறுமாந்தேன். கடிதத்தை தந்தையின் கைசேர்த்திட்டேன். அவர் படிக்க நான் அருகிருந்து பார்த்திட்டேன் அவர் முகத்தை,

அன்புள்ள அல்லி,

உன் தந்தையின் வார்த்தையில் தவறேதுமில்லை. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்று எடுத்துரைத்த வார்த்தை எல்லாம், என்னவரினும் பொறுத்திருந்து பார்க்கத்தான் உதவியது. அதனால் தன் மதிப்பும் தரைமட்டமாக்கப்பட்டதுதான் மிச்சம். தகுதிக்கேற்ற ஊதியமும் தருவதில்லை. தரித்திரமும் தாழ்வும்தான் எஞ்சியது இம்மூன்றாண்டு வாழ்க்கையிலே! படித்தென்ன! பட்டம் பெற்றென்ன!!

உன் கடிதம் கண்டேன், உடன் ஒருமுடிவும் கொண்டேன். என் தொழிலுக்கும் விடுதலை தந்துவிட்டேன். நகர்ப்புறத்தில் சிறுகடை ஒன்று வைத்து உன் அப்பா எதிர்பார்க்கும் பொருளீட்டத் துணிவுகொண்டேன். தங்கள் அல்லி என்று எழுதியதால் என் பொருட்டு உன் தந்தையிடம் ஓராண்டு பொறுத்திருக்க முடிவு செய்வாய்.

உன்
அறிவழகன்.

அப்பா சிரித்தார் அகமெல்லாம் பூரித்தேன்.

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

செய்தார். தன் காரியத்திற்காக ஆயிரம் புளுகி இருப்பார். அதையெல்லாம் நம்பலாமா? 'ஏதோ கிடைத்தவரை இலாபம்' என்று நினைத்துக்கொண்டு போப்பா, முத்தையா போ! இனி இந்த வயலுக்கும் உனக்கும் யாதொரு தொடர்புமில்லை. மிராசுதார் கூட நீ வந்தாயானால் இதைத்தான் சொல்லி அனுப்பச் சொன்னார்"—கணக்கப்பிள்ளை நீட்டி முழக்கினான்.

"என்ன? என்னை அனுப்பச் சொன்னாரா? என் உடல் வலிமையால் உழைத்து உருவாக்கிய இந்த உன்னத பூமியைவிட்டு என்னைப் போகச் சொன்னாரா? எங்கே அந்த மிராசுதார்?"

'ஏன்? அவரைப் பார்த்து நீ என்ன செய்யப் போகிறாய்?"

"அவரைப் பார்த்து நான் என்ன செய்யப்போகிறேன்! அத்தகைய சுதந்திரம் இந்த நாட்டில் இருந்தால் இந்த நிலையே ஏற்பட்டிருக்காதே.

"பின் ஏன் தேடுகிறாய்?"

"என்னுடைய ஆத்திரம் அடங்க அவரை நான்கு வார்த்தைகள் கேட்டுவிட்டுச் செல்லத்தான்."

"அட, பைத்தியக்காரா! அதற்குக்கூடக் கொஞ்சம் நாளாகுமே. அவர் திருப்பதிக்கு அல்லவா போய் இருக்கிறார்?"

"திருப்பதிக்கா?"

"ஆமாம்; அவருடைய கோரிக்கைகளையெல்லாம் ஏழுமலையான் நிறைவேற்றி விட்டானாம். ஆகையால் சொன்ன பிரார்த்தனையை செய்யப் போய் இருக்கிறார்."

"ஏழுமலையான் நிறைவேற்றி வைத்த கோரிக்கைகளுள் ஆயிரம் ரூபாய்க்குமேல் விற்கக்கூடிய என் நிலத்தை ஆயிரம் ரூபாய்க்கே முடித்து வைத்ததும் ஒன்றாக இருக்கலாமோ?" என்றெண்ணிய வண்ணம் கால்போன போக்கெல்லாம் போனான் முத்தையன்.

எவனோ ஒருத்தன் உழைப்பின் உயர்வுபற்றி முழங்கிக் கொண்டிருந்தான். வேறொருத்தன் தனி மனிதன் சுதந்திரத்தைப் பற்றி வாய் கிழியப் பேசிக்கொண்டிருந்தான்.

எப்பமிட்டவனுக்கு வேண்டுமானால் இவ்விரு பேச்சுகளும் இனிக்கலாம். ஆனால் உழைத்து உழைத்து ஓடாகிப்போன முத்தையனுக்கு — ஏமாளியாய் ஏங்கிக் கிடக்கும் முத்தையனுக்கு இவ்விரு பேச்சுக்களுமே வெறுப்பூட்டின!

"ஏமாளியே! கேள்," என்றான் இன்னொருத்தன்.

"இவன்தான் நம்மினத்தான்" என்றெண்ணிய முத்தையன் குரல் வந்த திசை நோக்கி விரைந்தான்!

"உதயசூரியனின் இளங்கதிர்கள் புண்பட்ட உன் இதயத்திற்கு இன்பமளிக்கப் போகின்றன" என்றான் எதிரில் வந்த வேறொருத்தன். அவன் பின்னே நடைபோட்டான்—முன்னேற்றம் காண.

★

வால்டேரின் எண்ணக் குவியல்கள்

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட வித்தகனும் வால்டேரைப்பற்றி அறியாதார் மிகச்சிலரே. அச்சிந்தனைச் சிற்பியின் புரட்சிக்கருத்துக்களில் சிலவற்றைத்தான் நான் இங்கு தமிழில் தந்திருக்கிறேன். கீழ்க்கண்ட கருத்துக் குவியல்கள் அவரியற்றிய எண்ணற்ற நூல்களில் ஒருசில துளிகள் என்றாலும், அதில் காணப்படுகின்ற அழகினையும் உயிரோட்டத்தையும் நோக்கும்போது இவைபோன்ற கருத்துக்கள் மக்களை எழுச்சியடையச் செய்தது வியக்கத்தக்கதல்ல என்பது நன்கு புலப்படும். அவர் கூறுகின்ற ஒவ்வொரு கருத்தும் எடுத்துக்காட்டுகளுடன் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. அவர் மொழியிலேயே கூறவேண்டுமானால், அவரெழுத்துக்கள் நம்முள்ளத்தே வியப்பையும் இன்பத்தையும் ஒருங்கே யூட்டுவதன்மூலம் அழகுள்ளதாக விளங்குகிறது. ஜனநாயகம் ஒரு மிகச்சிறிய நாட்டிற்கே பொருந்தும் என்று அவர் உதிர்த்த கருத்து நம் திருவிடத்தின் பிரிவினைக்கொள்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதாக அமைவதோடல்லாமல் "இவ்வளவு சிறிய நாடு வாழுமா?' என்று குதர்க்கம் பேசுகிற அகில இந்திய ஜனநாயகவாதிகளுக்குச் சவாலாகவும் அமைகிறது. இப்போது நாம் அவருடைய சிந்தனை என்னும் மலரினின்று சிதறிய சில தேன்துளிகளைச் சுவைப்போமாக.

ஜனநாயகம்

எஞ்ஞான்றும் பேரார்வமுடைய பெரியோர் செய்கிற குற்றங்களையும், சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் எஞ்ஞான்றும் வேண்டுகின்ற, வேண்டவே மட்டும் முடிகின்ற, மக்கள் செய்கிற குற்றங்களையும் சட்டதிட்டமாக ஒப்பிடுதல் இயலாது. சுதந்திரம், சமத்துவம் இந்த இரண்டு உணர்வுகளும், அவதூறு பேசுதல், பலாத்காரம், கொலை, நஞ்சிடல், மாற்றான் நிலத்தை வீணுக்குதல், இன்னோரன்ன செயல்களுக்கு நம்மை நேரடியாகக்கொண்டுசெல்வதில்லை. ஆனால் பேராசையின்கண் எழுந்த வலிமையும், பதவி வெறியும் எக்காலத்தும் எவ்விடத்தும் மக்களை இக்குற்றங்களில்கொண்டுதள்ளும். எனவே,மக்கட்செல்வாக்குப் பெற்ற ஆட்சியில் கொடுங்கோன்மையைவிட அநீதியும் அருவருப்பும் குறைந்தே காணப்படும்.

ஜனநாயகத்தால் விளையக்கூடிய மிகப் பெரிய தீமை, நிச்சயமாகக் கொடுங்கோன்மையாகவும் கொடுமையாகவும் இருக்க முடியாது. மலைவாழ் ஜனநாயகவாதிகள் பலர் காட்டுமிராண்டிகளாகவும், கொடுமை நிறைந்தவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் அவர்களை அவ்வாறு மாற்றியது, ஜனநாயக மனப்பான்மையல்ல. அஃது இயற்கையாய் அமைந்தது.

கோ. வரதன்

நாகரிகமான ஒரு மக்களாட்சியின் உண்மையான தீமைகள் 'துருக்கிப்பழங்கதை'களில், பல்தலை நாகத்தின் தலைகள் ஒன்றையொன்று தாக்கிக்கொள்வதாகவும் அதன் பல வால்கள் எதையும் தாக்கிவிழுங்க முயலும் ஒரு தலைக்குக் கீழ்ப்படிவதாகவும் கூறும் வாயிலாக நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

ஜனநாயகம், இயற்கைவளத்தால் இனிதமைந்த ஒரு மிகச்சிறிய நாட்டிற்கே ஏற்றது எனத் தோன்றுகிறது. எத்துணைச்சிறியதாக இருப்பினும், அஃது (ஜனநாயகம்) எண்ணற்ற தவறுகளை இழைக்கும். குடியாட்சியில், மடங்களில் நிலவுவதுபோன்ற முரண்பாடுகள்தான் ஆட்சிபுரியும் ஆயினும், அங்கே, 'புனித பர்த்தலமேயுக்களோ' 'அயர்லாந்துப் படுகொலைகளோ' 'சிசிலிப்படுகொலைகளோ' 'பாபவிசாரணைகளோ' கடல்நீரை விலைதராமல் எடுத்தற்காகக் கப்பலடிமைகளாக ஆக்குதலோ போன்ற செயல்களை, அஃது ஆழ்நரகின் மூலையில் முடங்கிய பேய்க்கூட்டத்தைக் கொண்டதொரு ஜனநாயகமாக இருந்தாலன்றிக் காணுதல் இயலாது. குடியாட்சியா? முடியாட்சியா? எது சிறந்தது? என்ற ஈறிலா வினா நம்முள்ளத்தே நிழலாடுகிறது. இந்த வாதம், என்றுமே மக்களை ஆள்வது மிகக்கடினம் என்ற உடன்பாட்டில்தான் முடிவடைகிறது. யூதர்கள் கடவுளையே தம் தலைவராகக்கொண்டனர். அதனால் அவர்களுக்கு விளைந்த பயனென்ன? அவர்கள் எஞ்ஞான்றுமே ஒடுக்கப்பட்டும் அடக்கப்பட்டும் வந்ததோடு இன்று நகையிழந்த முகத்தினராய் இருப்பதையே நாம் காண்கிறோம்.

அழகு

'அழகு' என்றால் என்னவென்று ஒரு தோடனைக்கேட்டுப் பார்! அவன் அஃது, இரண்டு வட்டமான பிதுங்கிய கண்களும், அகலமும் தட்டையுமான வாயும், மஞ்சள் நிறமுள்ள வயிறும், பழுப்பு நிறமுள்ள முதுகுமுடைய ஒரு தோடப்பெண் என்றுதான் இயம்புவான். கினியா நீக்ரோ ஒருவனைக்கேள்! அவனுக்கு அழகென்பது கரியதோலும், புதைந்த கண்களும், அகலமான மூக்கும்தான். பேயைக்கேட்டால் அது இரு கொம்புகளும், நான்கு நகங்களும், ஒரு வாலும்தான் 'அழகு' என்று கூறும். இறுதியாக நீ தத்துவ ஞானிகளைக் கலந்தாலோசித்தால், அவர்கள் அர்த்தமற்ற வார்த்தைகளைப் பதிலாக இறுப்பதோடு இயற்கையாக இருக்கவேண்டிய அழகின் உயிரோவியத்தை ஒத்த ஏதோஒன்றுதான் 'அழகு' என்று வற்புறுத்தத் தலைப்படுவர்,

ஒரு நாள்; நான் தத்துவஞானி யொருவர் அருகில் அமர்ந்து துன்பியல் நாடகமொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். "இஃது எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று அவர் என்னிடம் கூறினார். "அதிலென்ன அழகை நீங்கள் காணுகிறீர்கள்?" என்று நான் அவரைப்பார்த்துக் கேட்டேன். அதற்கவர், "கதாசிரியர் எதைச் செய்யவேண்டுமென எண்ணினாரோ அதைச் சாதித்துவிட்டார். எனவேதான் அஃது அழகாக இருக்கிறதென்று கூறினேன்" என்று விடையிறுத்தார்.

அடுத்த நாள், அத் தத்துவ ஞானி சிறிதளவு மருந்து உட்கொண்டார். அது அவருக்கு நன்மைபயத்தது. "மருந்து எதைச் செய்யவேண்டுமென்பதற்காகத் தயாரிக்கப்பட்டதோ அதைச் சாதித்துவிட்டது—எனவே எவ்வளவு அழகான மருந்து!" என்று நான் அவ்ரைப் பார்த்துக் கூறினேன். அப்பொழுதுதான், மருந்தை ஒருவன் அழகானதென்று கூற முற்படான் என்பதனையும், ஒரு பொருளை அழகானது என்று அழைப்பதற்கும் அஃது நம்முள்ளத்தில் வியப்பையும் இன்பத்தையும் ஒருங்கே எழுப்பவேண்டும் என்பதனையும் அவர் உணர்ந்தார். மேற்கூறிய துன்பியல் நாடகம் அவருள்ளத்தே இவ்விரு உணர்ச்சிகளையும் தூண்டிற்று என்றும், இவ்வுணர்ச்சிகளில்தான் அழகு குடிகொண்டிருக்கிறதென்றும் அவர் ஒப்புக்கொண்டார். நாங்கள் பின்னர் இங்கிலாந்திற்குச் சென்றோம். மேற்கூறிய அதே நாடகம் உள்ளபடியே மொழிபெயர்க்கப்பட்டு அங்கு நடிக்கப்பெற்றது. ஆனால் அஃது காண்போரனைவரையும் கொட்டாவிவிடச் செய்தது. உடனே அவர் (தத்துவஞானி) "ஓகோ! அழகு, ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஒன்றல்லப் போலும்" என்று தனக்குள்கூறிக் கொண்டார். நீண்ட சிந்தனைக்குப் பின், ஜப்பானின் தூய்மையானதென்று கருதப்படுவது, ரோமில் தூய்மையற்றதாகக் கருதப்படுவது போலவும், பாரிசில் நாகரிகமானதென்று கருதப்படுவது பீக்கிங்கில் நாகரிகமற்றதாகக் கருதப்படுவது போலவும், அழகென்பது சார்புக்கேற்ப அப்போதைக்கப்போது மாறுகின்ற தன்மையுடைத்து என்ற முடிவிற்கு அவர் வந்தார். அம்முடிவிற்கு வந்ததன் மூலம் அழகைப்பற்றி நீண்டதொரு கட்டுரையை இயற்றுகின்ற கடும்பணியினின்று அவர் தன்னைக் காத்துக்கொண்டார்.

அகில உலகும் அழகானதென்று ஒப்புக்கொள்ளுகின்ற பண்புகள் பல உண்டு. ஒருவர்க்கொருவர் கடும்பகைவரான சீசரின் அதிகாரிகள் இருவர் தமக்குள் ஒரு சபதமெடுத்துக்கொண்டனர். அச் சபதம் நம்மைப்போல், அவரிருவருள் எவர் குருதியை எவர் மறைந்து நின்று தாக்குவதன் மூலம் சிந்தச் செய்வது என்பது பற்றியல்ல. ஆனால் அஃது, போர் வெறியரின் தாக்குதலுக்கு உட்படும் நிலையிலிருந்த ரோமானியரை எவர் நன்றாகக் காக்கமுடியும் என்பதைப் பற்றியதாகும். அவ்விருவருள் ஒருவர் பகைவரைப் புறமுதுகிட வைத்துவிட்டுக் குற்றுயிரானார். அப்போது மற்றவர் அவர் உதவிக்கு விரைந்தோடி அவர் உயிரைக் காப்பாற்றி வெற்றியைத் தேடித்தந்தார்.

ஒரு நண்பன் மற்றொரு நண்பனுக்காக அவன் இன்னுயிரை அளிப்பதும், ஒரு தனயன் தன் தந்தைக்காகத் தன்னுயிரைத் தருவதுமாகிய செயல்கள், ஆங்கிலேயன் பிரெஞ்சுக்காரன், சீனன் ஆகிய எல்லோராலுமே மிக்க அழகுள்ளதெனவும், அச்செயல்கள் அவர்களுக்கு இன்பமூட்டுமெனவும், அவை அவர்களால் வியக்கத்தக்கவை எனவும் ஒப்புக் கொள்ளப்படும். அவர்கள், ஜோரோஸ்டரின் "ஒரு செயல் நியாயமானதா என்பதில் உனக்கு ஐயமேற்பட்டால் அதனைச் செய்யாமல் விடு" என்பதும், கான்பியூஷியஸின் "பிறரால்உனக்கிழைக்கப்பட்ட தீமைகளை மற; நன்மைகளை என்றுமே மறவாதே" என்பதுமாகிய ஒழுக்கத்தைப்பற்றியசிறந்த அறிவுரைகளைப்பற்றி நிரம்பக் கூறுவர்.

வட்டமான கண்களும் அகன்ற மூக்கும் உடைய நீக்ரோ நம்முடைய அரண்மனைப் பெண்களுக்கு "அழகு" என்ற பெயரை ஒருபோதும் அளிக்கமாட்டான். எனினும், சற்றும் தயக்கமின்றி அப்பெயரை நான்மேற்கூறிய அரிய செயல்களுக்கும், அறிவுரைகளுக்கும், நிச்சயமளிப்பான். தீயவனொருவன்கூட நற்குணங்களின் அழகை, அவற்றைத்தான் பின்பற்ற இயலாத நேரத்தில், புரிந்து கொள்கிறான். உணர்ச்சிகள், கற்பனை, நுண்ணறிவு முதலியவற்றைப்பற்றியே கூறப்படும் அழகு, அடிக்கடி நிச்சயமற்றதாகின்றது. ஆனால் இதயத்தைப்பற்றிக் கூறப்படுகின்ற அழகோ அவ்வாறன்று. ஓமர் இயற்றிய "இலியட்" காவியத்தின் மூன்று பகுதிகளில் அழகென்பதையே காணமுடியவில்லை என்று இயம்புகிற மக்கள் பலரை நீ காணமுடியும். ஆனால் கோட்ருஸ் தன் மக்களிடம் காட்டிய அன்பை, அஃது உண்மையென்று வைத்துக்கொண்டால், அழகானது என்பதை எவருமே மறுக்க முன்வரார்.

நட்பு

நட்பு என்பது உயிர்களின் திருமணமாகும் (பிணைப்பாகும்). இத்திருமணம் விலக்குக்குட்பட்டது. அஃது நுண்ணுணர்வும் குணநலனும் படைத்த இருவர்க்கிடையே ஏற்படுகின்ற தொக்கி நிற்கும் ஒப்பந்தமேயாகும் "நுண்ணுணர்வு படைத்தவர்" என்று நான் குறிப்பிட்டது, தனித்து ஒரு மடத்தே உறையும் துறவி தீமையே புரியாதவனாக இருக்கஇயலும், எனினும் அவன், நட்புக்குப் பொருள் காணாது வாழ்கிறான் என்பதனால்தான். "குணநலம் படைத்தவர்" என்று நான் கூறியதற்குக் காரணம் இதுதான்; தீயவனுக்குத் தீயோர் சேர்க்கைதான் உண்டு, சிற்றின்பப் பிரியருக்குச் சிற்றின்பக்கூடத்தில் துணைவர்களுண்டு, சுயநலமிகளுக்குப் பங்குதாரர் உண்டு, அரசியல் வாதிகளோ கட்சிவெறி கொண்டவர்களைக் கவர்கிறார்கள், பொதுப்படையாகச் சோம்பேறிகள்பற்றுக்கொண்டிருக்கின்றனர், அரசிளங் குமரர்களுக்குப் பிரதானியர் உண்டு, ஆனால் குணநலம் படைத்தோர்க்கு மட்டுமே நண்பர்களுண்டு.

கத்திகஸ் கேட்டிலைனுக்குக் குற்றமிழைப்பதிலே கூட்டாளியாக விளங்கினான்; மாசினஸ் ஆக்டேவியசின் அவையிலே பிரதானியாக வீற்றிருந்தான்; ஆனால் கிசரோவோ, ஆட்டிகசுக்கு நண்பனாக இருந்தான்.

காவலனைத் திருத்திய பாவலன்

பண்டை நாட்களில் நம் தமிழகம் பாரெல்லாம் புகழுடன் விளங்கிற்று. நாடெங்கும் கல்வியும் செல்வமும் நிரம்பியிருந்தன. நல்ல ஒழுக்கமும் பண்பும உள்ளவர்களாக மக்கள் வாழ்ந்தனர். நாட்டு மக்களில் பலர் ஆன்று அவிந்த அறிவுடைச் சான்றோர்களாய்த் திகழ்ந்தனர். அவர்களின் அறிவுரைகளை மக்கள் மட்டுமல்லாது மன்னர்களும் கேட்டு அதன் ஒழுகினர். அதனால் தமிழகம் வளநாடாக மட்டுமின்றி வையகம் புகழும் சான்றோர்கள் பலர் வாழ்ந்த திருநாடாகவும் விளங்கிற்று.

அனைவராலும் ஏற்றிப் போற்றப்படுகிற அக்காலத் தமிழகச் சான்றோர்கள் அறிவுச் செல்வத்தால் நிறைந்தவர்கள். அவர்களுள் உயர்குடிப் பிறந்தோர், தாழ்வுடைக் குலத்து வந்தோர் என்ற வேறுபாடு இல்லை. ஆண் பாலர், பெண் பாலர் என்ற வேறுபாடு காட்டாது அறிவால் மேம்பட்டவர்களின் வாயினின்றும் வெளிவரும் வண்டமிழ் நல்லற மொழிகளையே மக்கள் மதித்தனர். அத்தகைய அறிவின் ஒளி விளக்குகள் நாடெங்கும் சென்றன. அறியாமை இருள் அடர்ந்த இடங்களுக்கும் அது சிறிதே படர்ந்த பகுதிகளுக்கும் போயின. எங்கும் அறியாமை அகன்று அறிவொளி பரவியது. அறிவுச் செல்வர்களை மக்கள் போற்றினர்; புகழ்ந்தனர். பொன்னும் பொருளும் அளித்து அவர்களைப் பாராட்டினர்; புவனமெங்கும் அவர்களின் புகழைப் பரப்பினர்.

நாடாள்வோரும் இந்நன்னெறிக்கு மாறுபட்டு நடந்தார்களில்லை. பதவிக்கும் பொருளுக்கும் பாவையர் தரும் இன்பத்திற்கும் மயங்கி, அறிவிழத்தலும் அறநெறி தவறுதலும் மனித இயல்பே. எனினும் அவ்வேளைகளில் சான்றோரின அறிவுரைகளின்படி தவறுகளைத் திருத்திக் கொள்ளலே தலைசிறந்ததாகும். பழந்தமிழ் மன்னர்களிடம் இத்தகைய சீரிய பண்பு இருந்து வந்தது. அதன் பயனை அவர்கள் நலன் பெற்றனர். அவர்களை அரசர்களாகக் கொண்ட நாட்டினர் நலன் உற்றனர். அதற்குக் காரணமாய் விளங்கிய புலவர் பெருமக்களும் போற்றப்பட்டனர்.

குடிமக்களாயினும்சரி, கோலோச்சும் அரசர்களாயினும் சரி, அறநெறி தவறி நடந்தாலும், அடாதன செய்தாலும் அவர்களது வலிமைக்கு அஞ்சாது அவர்களின் தகாத செயலைத் தக்கமுறையிலே இடித்துக்கூறித் திருத்திய பைந்தமிழ்ப் புலவர்களிலே பெரும் புலமையும் போராற்றலும் மிக்க ஒருவர் "பிசிராந்தையார்" என்பவர். அவர் பாண்டிய நாட்டைச் சேர்ந்த பிசிர் என்றஊரில் வாழ்ந்த

இரா. செல்வன்

பெரும்புலவராவர். அவரிடம் கவிச்செல்வம்மட்டுமன்றிப் புவிச்செல்வமும் நிறைய இருந்தன. ஏராளமான நிலபுலங்களையும் ஏவலாட்களையும் கொண்ட ஒரு பெரும் பண்ணையாராக இருந்து வந்த அவர்,எப்போதும்அவரதுசொந்த ஊரிலேயே வாழ்ந்து வந்தார். என்றாலும் அவ்வப்போது ஓய்வு நேரத்தில் மதுரைமாநகர் சென்று அரசனையும் அவன் அன்புடன் வைத்து ஆதரித்து வந்த அவனது அவையிலுள்ள தமிழ்ப் புலவர்களையும் கண்டு அளவளாவி வருவார்.

அப்போது மதுரையைத் தலைநகராகக்கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டவன் பாண்டியன் அறிவுடைநம்பி என்பவன். அவன் அறிவும் அழகும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவன். அறிவாற்றல் மிக்கவனாக இருந்த காரணத்தால் 'அறிவுடை' என்ற அடைமொழியும்அழகுமிக்குடையவனாக இருந்த காரணத்தால் 'நம்பி' என்ற சிறப்புப் பெயரும் இடப்பட்டு "அறிவுடைநம்பி" என்று அழைக்கப்பட்டு வந்தான். அவன் தீந்தமிழ்ப் பாக்கள் இயற்றும் புலமை பெற்றவனாகத் திகழ்ந்ததோடுவீரத்திலும் ஆண்மைத் திறத்திலும் சிறந்து விளங்கினான். அவனது ஆளுகையின்கீழ் பாண்டிய மண்டலம் முழுவதும் அடங்கிக்கிடந்தது. இத்துணை வலிவும் பொலிவும் பெற்று விளங்கிய அறிவுடைநம்பியின் பெயரும்புகழும் தமிழகமெங்கணும் ஒளிவீசி நின்றன என்பதில் வியப்பொன்றுமில்லை.

பாண்டியன் அறிவுடைநம்பியின் அறிவையும் அழகையும் கண்டும், அவனுக்கிருந்த செல்வத்தையும் செல்வாக்கையும் உணர்ந்தும் அவனிடம் பல பெண்கள் காதல் கொண்டனர். அவனும் காதல் மயக்கத்துக்கு அடிமையாகிவிட்டான். ஆகவே, அவனுக்குக்காதற் கிழத்திகள் பலர் ஏற்படலாயினர். அவர்கள் அனைவரையும் தனித் தனி மாளிகையில் வைத்துக் காப்பாற்றி அவர்களுக்காகப் பெரும் பொருள் செலவழித்து வந்தான். அக்காதற்கிழத்திகளின் விருப்பத்திற்கும்வேண்டுகோளுக்குமிணங்க அவர்களது சுற்றத்தாரையும் தாமே காப்பாற்ற வேண்டிய பொறுப்புடையவனாகவும் இருந்து வந்தான். அதனால் அவனுக்கு ஏராளமான பொருட் செலவு ஏற்பட்டது. அவனது செல்வமெல்லாம் நாளுக்கு நாள் கரைந்தது. அடிமை அரசர்கள் செலுத்தும் கப்பமும் குடிமக்கள் கொடுக்கும் வரியும் அவனுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, குடிமக்களிடமிருந்து பெறும் வரித்தொகையை மேலும் மேலும் பெருக்க வேண்டியவனானான்.

அரசனின் அறிவும் ஆற்றலும் கண்டு அவனைப் போற்றிப்புகழ்ந்த மக்கள், அவனது நெறிகெட்ட நிலை கண்டு அவனை வெறுக்கத் தலைப்பட்டனர். ஒவ்வொரு முறையும்

தாம் செலுத்தும் வரிப்பணம் உயர்ந்துகொண்டே போவது குறித்து வருந்தினர். மண்ணிலிருந்து கிடைக்கும் வருவாயில் பெரும் பகுதியை மன்னனுக்கு வரியாகக் கொடுத்துவிட்டு எஞ்சிய கொஞ்சப் பகுதியை வைத்துக்கொண்டு ஏதும் செய்ய முடியாமல் எங்கணும் மக்கள் வாடினர். இந்த நெருக்கடியான நிலையை எப்படி அரசனிடம் எடுத்துரைப்பது என்று அஞ்சி எல்லாரும் வாளா இருந்தனர்.

ஆண்டுதோறும் வரித்தொகை அதிகரித்துக்கொண்டே போயிற்று. 'இனித் தாளமுடியாது' என்ற நிலை ஏற்பட்டபோது ஏர் பிடித்து வாழும் உழவர் பெருமக்களும் ஏனையோரும் பெரும்புலவர் பிசிராந்தையாரிடம் சென்றனர். அரசன் அறிவுடைநம்பியிடம், அளவுக்கு மீறிய வரியால் அவதியுறும் அவர்களது நிலைமையை எடுத்துச்சொல்லி நிறைய வரி வாங்கும் கொடுமையை நீக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். பிசிராந்தையாரும் ஒரு பெருநிலக் கிழாராக இருந்ததால் வரிக்கொடுமையை நன்கு உணர்ந்திருந்தார். நீதிக்குப் பாடுபடவேண்டும் என்ற நேர்மையுள்ளமும் நிலந்திருத்திப் பாடுபடும் ஏழைக்குடிமக்களின் கண்ணீர் கண்டு பொறாத கருணையுள்ளமும் கொண்ட பிசிராந்தையார், அறிவுடைநம்பியைக்கண்டு, அவனை இடித்துரைத்து, அவனுக்கு அறிவுரை கூறவேண்டும் என்று எண்ணினார். அந்த எண்ணத்தோடு மதுரைமாநகர் நோக்கிச் சென்றார்.

பிசிராந்தையாரைக் கண்ட அரசன் அறிவுடைநம்பி பெருமகிழ்வோடு அவரை வரவேற்றான். அவரைத் தனி இருக்கையில் அமரச் செய்து தானும் அமர்ந்தான். இருக்கையில் அமர்ந்த புலவர் ஏதும் பேசாதிருந்தார். 'என்றும் போலன்றி இன்று ஏன் புலவர் இப்படி வாய்மூடி மௌனியாய் இருக்கிறார்? என்னகாரணம் இவர் அமைதிக்கு?' என்ற ஐயம் மேலிட்டது அரசனுக்கு.

"புலவர் பெருமானே! இன்மொழிகளைப் பேசி என்னை மகிழ்விக்கும் தாங்கள் இன்று ஏன் இப்படிப் பேசாதிருக்கிறீர்கள்? என்றுமில்லாத வாட்டமும் வருத்தமும் தங்களைக் குடிகொண்டுள்ளது ஏன்?" அரசன் அடக்கத்தோடு கேட்டான்.

"எல்லாம் உன்னால்தான்" புலவர் கொஞ்சம் கோபக்குறியோடு கூறினார். அரசன் திடுக்கிட்டுப் போய், 'என்ன தவறிழைத்தேன் நான்?" என்று அச்சங்கலந்த குரலில் வினவினான்.

"என்ன தவறு செய்தேன் என்றா கேட்கிறாய்? இனி நீ செய்ய வேண்டிய பெரும் பிழை என்ன இருக்கிறது?" என்று புலவர் சினம் பொங்கக் கேட்டார்.

ஏதும் புரியாத அரசன் பதறிப் போய் இருக்கையைவிட்டு எழுந்து புலவரை நோக்கி வணங்கி நின்றான். "புலவர் பெருந்தகையே! தாங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லையே!" என்று பணிவுடன் கூறினான்.

'எப்படிப்புரியும் உனக்கு? இங்கு யார் இருக்கிறார்கள் உன்னை இடித்துரைத்துத் திருத்த?" என்றார் புலவர்.

"பெருமைக்குரிய பெரியாரே! புரியுமாறு தாங்கள்தான் எனக்கு அறிவுறுத்தவேண்டும்" தழுதழுத்தக் குரலில் அரசன் வேண்டினான்.

"நாட்டின் நலத்திலே நாட்டங்கொள்ளவேண்டிய நீ காதற்கிழத்திகளின் காமவலையில் சிக்கிச்சீரழிந்து கிடப்பதையும், நாள்தோறும் அக்காதற் கிழத்திகளுக்கும் அவர்களின் சுற்றத்தார்களுக்கும் பெரும் பொருள் செலவழித்து வருவதையும், அதற்காகக் குடிமக்களின் அன்பு கெடும்படி அதிக வரி வாங்கும் நெறியற்ற முறையையும்தான் குறிப்பிடுகிறேன்" ஆத்திரம் பொங்க — ஆனால் அமைதியாகப் புலவர் புகன்றார்.

தனது பெருமதிப்பிற்குரிய புலவர் பெருந்தகையாளரால் தான் இடித்துக் காட்டப்படவேண்டிய இழிநிலைக்கு வந்துவிட்டதைக் குறித்து வருந்திய அரசன், 'ஏற்றமிகு சான்றோரே! என் பிழைகளையெல்லாம் பெருமனது வைத்துப் பொருத்தருள வேண்டும்" என்று நாத்தழுதழுக்க வேண்டிக் கொண்டான்.

"நான் பொறுப்பதைவிட நீ திருந்துவதுதான் முக்கியம்" என்றார் புலவர்.

"எந்தப் பிழையும் செய்யமாட்டேன். இனித் தங்களின் அறிவுரைப்படியே நடக்கிறேன்', என்று கூறிக்கொண்டே அரசன் புலவரின் காலடியில் வீழ்ந்தான்.

அவசா அவசரமாகப்பிசிராந்தையார் எழுந்து அரசனைத் தூக்கி நிறுத்தி அவனது இருக்கையில் அமரச் செய்தார். அவனுக்கு ஏற்ற பல அறிவுரைகள் கூறினார்.

"நன்கு முற்றிக் காய்ந்த நெல்லை அறுவடை செய்து, நல்ல முறையிலே பாதுகாத்து வைத்துக்கொண்டு நாள்தோறும் வாயளவு கொண்ட கவளம் கவளமாக அதனைக் கொடுத்துவந்தால் ஒரு மாவுக்குக் குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லாக இருந்தாலும், அது யானைக்குப் பல நாட்களுக்கு உணவாக வரும். ஆனால், யானை தானே வயலில் புகுந்து தனது விருப்பம்போல் உணவு உண்ணத் தொடங்கினால் அவ்வயல் நூறு பரப்புடையதாக இருந்தாலும் அதில் விளைந்த நெல் மணிகள் ஒரு சில நாட்களுக்கே யானைக்கு உணவாகும். ஏனெனில் யானையின் வாயில் சிறு அளவு நெல் மணிகளே செல்லப் பெருமளவு நெல்மணிகள் அதன்காலில்பட்டுப் பாழ்படும். அதுபோல, அறிவுடை வேந்தனாக இருக்கும் ஒருவன் வரி வாங்கும் அரச முறைப்படி வரி வாங்கினால், அந்த முறை அவனுக்குப் பெரும் பொருளை ஈட்டித் தருவது மட்டுமல்லாமல், அவனது நாட்டையும் பெருமளவுக்குத் தழைக்கச் செய்யும். அவ்வாறன்றி அரசன் காதற்கிழத்திகளுக்கு உரிமையுடையவனாகி, அவர்களது தரம் அறியாத ஆரவாரம் மிக்க சுற்றத்தாரின் சொல்லினைக் கேட்டு குடிமக்களின் அன்பு கெடும்படி அதிக வரிவாங்க விரும்பினால் யானை புகுந்த வயல்போல நாட்டு மக்களின் நல்வாழ்வு கெடும்; யானையின் பரந்த காலில்பட்டு நெல்மணிகள் பாழ்படுவதைப்போல அரசனது கொடுமையால் குடிமக்களின் வரிகொடுக்கும் அன்புநிலை கெடும்; யானை எவ்வாறு நெல்மணிகளை

உண்ணமுடியாமல் போகிறதோ, அவ்வாறே அரசனும் செல்வத்தின் பயனை அனுபவிக்கமுடியாமல் போவான்; நெல்வயல் எங்ஙனம் பாழ்பட்டுப்போகுமோ, அங்ஙனமே குடிமக்களும் நிலைகெட்டுப் போவர். இதனை நீ தெளிவாக உணர்ந்து இனித் திறமையுடன் ஆட்சி செலுத்தவேண்டும்'' என்று அறிவுறுத்தினர்.

"தண்டமிழ்ச் சான்றோரே! என் தவறுகளையெல்லாம் தாங்கள் மன்னிக்கவேண்டும். இனி நான் ஒழுக்க நெறி தவறேன்; உயர் கடமை நெறி மீறேன். இது உறுதி!'' என்று அரசன் அறிவுடைநம்பி உள்ளமுருக உரைத்தான்.

தகாத நெறியில் சென்ற அரசனைத் தக்கமுறையில் இடித்துரைத்துத் திருத்திய பெருமையுடனும் பெருமகிழ்வுடனும் பிசிராந்தையார் அவரது ஊருக்குத் திரும்பினர்.

பாண்டியநாட்டின் காவலனும் பாண்டியன் அறிவுடைநம்பியின் தவறுகளை இடித்துரைத்து அவனைத் திருத்த பைந்தமிழ்ப்பாவலனும் பிசிராந்தையார் கூறிய அறிவுரைகள் எப்படிப்பட்டவையாக இருந்திருக்கும்? அதுவும் அவர் ஒரு சங்க காலத் தமிழ்ப்புலவர்! அரசனுக்கு அவர் கூறவிரும்பிய அறிவுரைகள் ஒரு பாட்டாக — பைந்தமிழ்ப் பாடலாக மலர்ந்தது. அப்பாடல் புறநானூற்றிலே காணக்கிடக்கின்றது. அதனை ஈண்டு காண்போம்.

காய்நெல் அறுத்துக்களம் கொளினே
மாநிறை(வு) இல்லதும் பன்னாட்கு ஆகும்;
நூறு செறு ஆயினும் தமித்துப்புக்(கு)
உணினே
வாய்புகு அதனினும் கால்பெரிதுகெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து
கொளினே
கோடியாத்து நாடு பெரிதுநந்தும்;
மெல்லியல் கிழவனாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென்சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்.
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான்; உலகமும்கெடுமே.

புறநானூறு 184.

பாராளும் மன்றம் பாரீர்!

—(அன்பு)—

505 பேர்! இந்த நாட்டை ஆளும் ஆட்சியை உருவாக்கக் கூடியவர்கள்; ஆளும் ஆட்சியை மாற்றவும் கூடியவர்கள். சட்டம் தயாரிப்பவர்கள்; திட்டத்தை உருவாக்குபவர்கள்; வரிகளைப் போடக்கூடியவர்கள்; வரிப்பளுவை நீக்கக்கூடியவர்கள்; அரசியல் சட்டத்தை இயற்றுபவர்கள்; அதை வேண்டியபோது திருத்தும் அதிகாரத்தையும் உடையவர்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக 40 கோடி மக்களின் பிரதிநிதிகள்; இத்தனை கோடி மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை அம் மாமன்றத்தின் முன் எழுப்பும் புனிதமான உரிமையைப் பெற்றவர்கள். 505 பேரும் கொண்டுவரும் எந்த ஒரு முடிவும் 40 கோடி மக்களின் வாழ்வோடு தொடர்பு கொண்டது. ஜனநாயகத்தின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்ற நான்கு சுவர்களுக்குள் அமரும் அரிய வாய்ப்பைப் பெற்றிருக்கும் அவர்கள் தான் இந்த நாட்டின் முதல் குடிமக்கள்.

ஆனால் எந்த அளவு இந்தப் புனிதமான வாய்ப்புக்களை உபயோகித்துக் கொள்ளுகின்றனர்? மிகவும் சிறப்பாக அதிக அளவு பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்ற நடவடிக்கைகளில் காட்டும் அலட்சியமான போக்கும் சிரத்தையின்மையும் நாட்டு மக்களின் சிந்தனைக்குரிய பிரச்சினையாகியுள்ளது.

அரசியல் சட்டத்தின் எட்டாவது திருத்தமாகத் தாழ்த்தப்பட்டோர் தனிச் சலுகைகள் நீடிக்க வேண்டும் என்ற மசோதா விவாதத்துக்கு விடப்பட்டபோது பாராளுமன்றத்தில் முழு நேரமும் வராதுபோன காங்கிரசு உறுப்பினர்களின் எண்ணிக்கை 130. இவர்களில் டில்லியில் அன்றைய தினம் இருந்திருந்தும் பாராளுமன்றத்திற்கு வராது போனவர்கள் 30 பேர். காங்கிரசு மேலிடத்திற்கே நெருப்பைத் தொட்டது போன்றாகிவிட்டது இத்தகைய போக்கு. சரியான காரணம் காட்டாதவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 21 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலோர் தக்க காரணங்களைக் கற்பனைசெய்து காட்டியிருக்கின்றனர்.

ஆரம்பப்பள்ளி அனுபவம் உடையவர்களுக்கெல்லாம் இந்த அனுபவம் நிச்சயம் ஏற்பட்டிருக்கும். ஆசிரியர் முன் தினம் வராத மாணவர்களைப் பார்த்து "ஏன் வரவில்லை'' என்று மிடுக்குடன் கேட்பார். முன் தினம் உற்றார் உறவினர் விருந்து வைபவங்களுக்குச் சென்று வயிறு புடைக்கப் புசித்த மாணவன் "அன்றைய தினம் வயிற்றுவலியால் வருந்திக் கொண்டிருந்தேனய்யா'' என்பான். தூரத்து ஊரில் கல்போல் உயிரோடிருக்கும் பாட்டியையும் "சாகடித்து,'' அதனால்தான் வரவில்லை சார் என்பான் மற்றொரு மாணவன். முன் தினம் சகநண்பர்களோடு விளையாட்டிலேயே கவனத்தைச் செலுத்தியிருந்தவன் "நேற்றுப்பூராவும் கடும் சுரம் சார்'' என்று சொல்வான்.

இவ்வாறு ஆரம்பப்பள்ளி மாணவர்களைப் போலத்தான், பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்ட பிரச்சினையின்மீது எழுந்த கட்சி ஒழுங்கு நடவடிக்கைகளுக்குப் பதில்தர முயன்றிருக்கின்றனர். சாதாரண சுரத்திலிருந்து மனித உயிருக்கே கேடு விளைவிக்கக் கூடிய இரத்த அழுத்த நோய் வரையில் காரணங்களாகக் காட்டப்பட்டிருக்கிறது! இவ்வாறு பாராளுமன்ற உரிமைகளைச் செயலாக்கிக்கொள்ளத் தவ

Best copy available.

றிய உறுப்பினர்கள் எந்த ஒரு எதிர்க்கட்சிக்குச் சொந்தமானவர்களல்ல. எந்த 'வகை'யிலும் பெரும்பான்மை கட்சியாக வேண்டும் என்று எல்லாவித தோற்றமும் எடுத்துவரும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். இவ்வாறு கடமையுணர்ச்சியை மறந்த உறுப்பினர்களைக் கட்டிக் காத்துவரும் கட்சிக் 'கொறடா'வை மிகவும் கடிந்துகொண்டிருக்கிருர் தலைமை அமைச்சர் நேரு.

வாக்குச் சீட்டளிக்கும் உரிமை பெற்றிருக்கும் எல்லாக்குடிமகனும் அறிந்திருக்கமுடியாத பாராளுமன்றப் 'புதுமை'கள் இதுபோல் நீண்டநாளாகப் பல நடைபெற்றுத்தான் வருகின்றன. சிரத்தையின்மை காரணமாகப் பாராளுமன்றத்திற்குச் சரிவர போகாதிருப்பது ஒரு "வாழும் பிரச்சினை"யாக இருந்துகொண்டு வருகிறதாம்!

கடந்தஆண்டு மார்ச் மாதத்தில்' இந்த நாட்டின் பெரும்பகுதி வரிப் பணத்தை விழுங்கும் பாதுகாப்புத் துறைக்கு 200 கோடி ரூபாய் செலவினம் ஒதுக்கப்படும் சட்ட விவாதத்தின்போது பாராளுமன்றத்தில் இருந்த மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை என்ன தெரியுமா? சாதாரண 70 தான்! சமீபத்தில், சமுதாயத்துறையில் மிகவும் சம்பந்த முடைய, சீர்வரிசைத் தடை (Dowry Prohibition Bill) மசோதா விவாதத்தின்போது பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 (நாற்பது)ஐத் தாண்டியதே இல்லை. எந்தச் சமுதாயத்திற்குச் சாதகமான ஒரு பிரச்சினை விவாதத்தில் இருக்கும்போது பெரும்பாலான உறுப்பினர்கள் பாராளுமன்றக் கட்டிடத்தினுள்ளேகூட நுழையாமல் பொழுதை வீணே போக்கிக்கொண்டிருந்தார்களோ, அதே உறுப்பினர்கள்தான் சமுதாயத்தை நோக்கி இந்த ஐந்தாண்டு காலம் முடிந்த பின்பு வரப்போகிறவர்கள்! இன்னொரு முறை சட்டத்துறை பற்றிய விவாதத்தின்போது பாராளுமன்றத்தில் இருந்த மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 17!!!

கடந்த கிழமை டி. சி. சர்மா என்பவர் ஆட்சித்துறையில் செய்ய வேண்டிய சில சீர்திருத்தம் பற்றி ஒரு பிரச்சினை ஒன்று எழுப்பி விவாதத்துக்கு கொண்டுவந்தார். அப்போது பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை--அந்நிகழ்ச்சியைக் குறிப்பெடுக்க வந்த பத்திரிகை நிருபர்களின் எண்ணிக்கையைவிடக் குறைவாக இருந்ததாம்!!!

இதுபோன்ற "கடமையுணர்ச்சி"யுடைய பெரும்பாலான உறுப்பினர்கள் நிறைந்த பாராளுமன்றத்தில்தான் தங்கள் கருத்தைத் தெரிவிக்க ஒருகண நேரமாவது கிட்டாதா என்று ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்த்துப் பெரும்பாலும் ஏமாற்றத்தையே கண்டு வருகின்றனர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலம் பெருமைபடும் வகையில் சென்றிருக்கும் இரு உறுப்பினர்கள்!— பள்ளிக்குச் செல்லுகிறேன் என்று கூறிவிட்டு வேறு எங்கோ சென்று விளையாடிவிட்டு வரும் சிறுவனுக்கும் இவ்வாறு கடமையுணர்ச்சியை மறந்த உறுப்பினர்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது! வயது வேறுபாட்டையும் இட மாற்றத்தையும் தவிர இருதரப்பினர்களும் ஒரே தன்மையினர்தான்!

"மாதம் ஒரு முறை அடிப்படைச் சம்பளமான 420 ரூபாய் வாங்குவதும் மற்றச் செலவினங்களுக்காகக்கொடுக்கப்படும்படித்தொகைகளைத் தவருமல் பெறுவதும்தான் இத்தகையவர்கள் டில்லி சென்று ஆற்றும் ஒரே பெரும் "கடமை". மற்ற உண்மையான கடமைகளைப் பற்றி இதுபோன்ற பெரும்பாலோர் சிரத்தை காட்டுவதே கிடையாது என்று துணிந்து குற்றம் சாட்டி எழுதுகிறது ஒரு வாரஏடு.

ஜனநாயகத்தின் முன்னேடிகள் என்று அழைக்கப்படுபவர்களின் தன்மையும்செய்கையும் இத்தகையதாயிருக்கிறது. தன்னைத் தேர்ந்தெடுத்தனுப்பியிருக்கும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டியவர்களில் பலர் தலைநகரத்தில் இருந்தும் பாராளுமன்றம் செல்லாது டில்லிமா நகர வீதிகளில் பொழுதைக் கழிக்கின்றனர்.

மக்களாட்சியின் பண்பும், பட்டனும் மதித்துக்கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலை இது. இதுபோன்ற நிலைகள் அடுத்தடுத்தாவது நிகழா வண்ணம் பாதுகாத்துக் கொள்ளும் உயரிய உரிமை, வாக்களிக்கும்போது பெற்றுள்ள ஒவ்வொரு குடிமகனது கையிலும் உள்ளது. அத்தகைய நிலை ஐந்தாண்டுகட்கு ஒரு முறை மட்டுமே வரக்கூடியது. ஒரு முறை தங்கள் வாக்களிப்பை மக்கள் அலட்சியப்படுத்திஞர்கள் என்ருல், அது பின் வரும் ஐந்து ஆண்டுகால வாழ்வை மட்டுமே பாதிப்பதோடு நின்றுவிடாது.

உழவன் அறுவடையில் வரும் அத்தனை நெல் மணிகளையும் மறு தடவை விவசாயத்துக்காகச் சேமிக்கமாட்டான். அவைகளுள் நல்ல மணிகளைத்தான் தேர்ந்தெடுத்து ஒதுக்குவான். எனவே ஒவ்வொரு ஐந்து ஆண்டு முடிந்து அடுத்த ஐந்து ஆண்டு தொடர்கிற அந்த இடைவெளிக்காலம்தான் நாட்டு மக்களுக்கு முறையே அறுவடைக் காலமும், மறு பயிரிடும் காலமுமாகும். இந்த இடைக்காலத்தில், அல்லன நீக்கி நல்லன தேர்ந்தெடுத்துக் கொள்வதில்தான் நாட்டு மக்களின் திறமையுள்ளது. அவர்களின் இந்தச்சீரிய செயலைப் பொறுத்ததுதான் ஆரம்பத்தில் நாம் கண்ட அதிசயங்கள் நிகழ்வதும் நிகழாமல் இருப்பதும்! எனவே இனி வரும் காலங்களிலும் இதுபோன்ற பாராளுமன்ற "அதிசயங்கள்" நிகழ்கின்றன என்ருல், அதற்கு முதற் காரணமாய் அமைபவர்கள், பொதுமக்கள் தான். ஏனெனில் அத்தகையவர்களில் யாரும் பொதுமக்களைச் சந்திக்காமல் வந்தவர்கள் என்று கூற முடியாது. ஆனல் அத்தகையவர்களுக்குப்பாராளுமன்றப் படிகளை மிதிப்பதற்குச்சந்தர்ப்பமே கொடுக்காமலிருந்தால்...? எண்ணம் விஞவாக எழும்போதுதான் வாக்காளர்கள் தங்கள் உரிமையை உணர்ந்தவர்களாவார்கள்.

★